KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஞு ஜனவரி மீ 19உ [No. 3

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 41
2. தமிழ்ப்பாடம் (ளவெண்பா - கலிங்கத்துக்காண்டம்) 43
3. வாழி தோழி (ஓர் கார் நாடகம்) P. இராமாநுஜன் 45
4. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 46
5. அப்பர் (64 கலைகள்—வியாகரணம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 48
6. கலித்தொகை—(பாலைக்கலி-2) T. A. கனகசபாபதி முதலியார் 49
7. நம்மாழ்வார் வைபவம் (4 பத்து-4 தசகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 50
8. காற்று மழை (அங்கம் 1. களம் 2) (Shakespeare's Tempest) 51
9. பொதிகை நிகண்டு (அகரவருக்கம்) S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 52
10. யாப்பிலக்கணம் — அடி வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 54
11. ஞானமொழிகள் க. வேலுப்பிள்ளை 56
12. வர்த்தமானம் 59

## கலாநிலயம்

### சொன்னசொல் விரோதம் 2.

**மா**னுட இயற்கை யென்ற வஞ்சனை வாசகத்தால் ஷாமல்ஹூஸேன் வந்தமுடிவு மிகவும் வருந்தத்தக்க தென்பதில் ஐயமில்லை. மனிதர் ஒழுக்கம் பிறழ்வதற்குக் காரணம், போதிய அளவு இன்னும் பிறழாமையே என்கின்றார் அவர். கற்பு என்னும் ஒரு சீலம் இருக்கின்றதென்று நாம் சிந்திப்பதனாலன்றோ, அக் கற்பின் எல்லையைக் கடப்பவரை நாம் இழிந்தோர் என்று கருதுகின்றோம்; இதற்கெதிராக, எல்லாரும் நிறையும் நாணமும் மானமும் முற்றிலுந் துறந்து அவரவர் தாம் நச்சிய தீவினைகளே முறைமையென நயந்து செய்யும் துணிவுடைய "வீரர்கள்" ஆவாரெனின், பிறகு நாளடைவில், கற்பென்னும் அச்சொல் அகராதிகளிலிருந்தும், கற்பென்னும் அக் கருத்து மனித மனத்தினின்றும் அறவே கழிந்துவிட, கடப்பதென்பதற்கு இனியோர் கற்பு இல்லையாதலின், அக் கற்பிழந்து பிறழ்ந்த ஒழுக்கத்தால் எத்துணைக் காமுகக் கள்வரும் இழிந்தனர் என்று இயம்புவதற்கு இயலாதாதலின், பிறழா ஒழுக்கத்துப் பெரியோர் என அன்னவரையும் அழைக்கலாம் என்று அவ் வமரிக்க ஆசிரியர் கொள்ளுந் துணிவு மிகக் கொடியதாதலின் இடிபடச் சிரித்துக் கழிப்பதற்கு இடனில தாகின்றது. அமரிக்கரைப் பரிகசிக்கும் கருத்துடன் நாமிதனை எடுத்துக் காட்டுகின்றோமல்லோம். இத்தகைய அவலக் கொள்கைகள் இப் பாரதநாட்டிலும் பரவிவருகின்றவொரு பரிபவத்திற்கே அழுங்குகின்றோம்.

அரசியல் வாதங்கள் அனைத்திற்கும் ஆதாரமாயிருப்பது, மாநுட இயற்கை யென்னும் அம் மாயப் பொய்ம்மையேயன்றி வேறன்று. அவரவர் தத்தம்சுய இலாபத்திலேயே முழு நாட்டம் வைத்து விவகரிப்பதே மாநுட இயற்கைஎன்பார். ஆதலால், ஒருவர் அல்லது ஓரினத்தவர் கையில் ஆட்சிசெய்யும் அதிகாரம் அடங்குமாயின் அவர் ஏனையோர்க்கெல்லாம் இடுக்கண்செய்தும் தங்கள் இலாபத்தைத்தேடிக்கொள்வார்களாகையால், தனித்தனி வகுப்பினர் தொழிலினர் ஜாதியினர் முதலியவர்களுக்குத் தனித்தனிப் பிரதிநிதிகள் தெரிந்தெடுத்து அப்பிரதிநிதிக் கூட்டத்தார் அதிகாரம் உடையவர்களாயினுற்றான், அன்னோர் ஜனங்களுக்குப் பொறுப்புடையவர்களாகி எல்லோர்க்கும் நியாயம் வழங்கப்படும் என்னுமிச்சொல், ஆழ்ந்த சிந்தனையின் ஆராய்ச்சிக்கு எதிரில் எத்தூரம் நிலைநிற்க வல்லதென்பதை எவரும் எளிதில் சோதித்தறியலாமே. ஒவ்வொருவனும் தன் தனி இலாபத்தையே தேடுவான் என்னும் மாநுட இயற்கை உண்மையாயின்-வேறென்! பிரதிநிதிகளாய் வருபவர்களும் மனிதர்கள்தாமே; மற்று, இக் கொள்கையின்படி அவர்களில் ஒவ்வொருவனும், அவ் வியற்கைக் கிணங்க, தன்னுடைய இலாபத்தையே தேடிக்கொள்வானல்லாமல், மற்றவர் நன்மையின் பொறுப்பைத் தானொன்றுந் தாங்கவேண்டுமென்று நினைக்கமாட்டானன்றோ! எந்த மாநுட இயற்கைக்கு மாறாகக் காவல் செய்யப்படுகின்றதோ, அந்தக் காவலும் அதே யியற்கையை உடையதாயிருக்குங்கால், செய்தியின் விளைவைச் செப்பவும் வேண்டுமோ! ஆதலின், "இங்கிலாந்துப் பார்லிமெண்டில், ஒருவரும் ஒருவருக்கும் பொறுப்புடையவராக இருப்பதை நான் கண்டதில்லை" என்று

சென்றவாரம் பம்பாயில் வந்திறங்கிய பர்னார்ட் ஷா கூறியதில் யாதும் வியப்பில்லை.

உதாரணங்களைப் பெருக்கவேண்டா. மாநுட இயற்கை யொன்றை, கூறியோ கூறுமற் குறிப்பிற் கொண்டோ நடைபெறுகின்ற சரித்திரங்களின் முடிவனைத்தும் இப்படியே. உண்மையில் "நான் மானுடன் அல்லன் அல்லன்" என்று பறைசாற்றுவது போன்ற காமம் கள்ளம் அவா அச்சம் முதலிய கயமைகளையே மாநுட இயற்கை என்று விவகரிப்பதால் விளையும் பல மதியிலாக் கொடுமைகளுக்கு அளவுதான் ஏதேனு முண்டோ!

மாநுட இயற்கை யென்னும் இம் மாயந் தெளிந்து வேறோர் வகையில் நம் வாழ்க்கையினை அமைத்துக் கொள்ளப் பயில்வோமென்னின் பயன் பெரிது பெற்றவராவோம். மாநுட இயற்கை இவ்வாறு இருப்பதால் அதற்கேற்ப அனைவரும் இப்படி இப்படி இருத்தலும் செய்தலுமே இன்றியமையாதன வென்னும் முடிவிற்குள் நம்மையே நாம் வஞ்சித்துக் கொண்டு போய்ச் சேர்த்துக்கொள்வதால் மாநுடவாழ்க்கை எல்லாத் திசையிலும் எல்லா வகையிலும் மேன்மேலும் அளப்பரிய அவலமே அடைந்துகொண்டு வருகின்றது. மாநுடஇயற்கை என்று பொதுப்படுத்தாமல் வேறுபடப் பகுத்தறியும் உண்மையையே நம் தமிழ் மூதறிஞர் ஐயமற நமக்குக் கற்பித்திருக்கின்றனர். இதனை மறந்து நாமேன் வீணிற் றயருழந்து கெட்டழிதல் வேண்டும்? திருக்குறள் நமக்கிருக்க உறுபொருள் ஒன்று உணர்தற்கு நாம் வேறெங்குஞ் செல்லவேண்டா.

யாம் கண்டவரையில், மாநுட இயற்கை இதுவென்று திருவள்ளவர், பொதுவுறலொன்றினைஎடுத்துக்காட்டியிருக்கின்றா ரலர். பெரியோர் என்றும் கயவர் என்றும் இரண்டு இனத்தினரை எடுத்துச்சொல்லி அவரவர் இயற்கை இன்னதென்றே பேசுகின்றார். ஆதலின், எத்திறத்திலும் ஒழுக்கம்பிறழ்ந்தகாரியங்களைக் காண்பதினின்று, காமத்தாலும் ஆசையாலும் ஒழுக்கம் பிறழ்வது மக்கட்கு இயற்கை என்று கொள்ளல் திருவள்ளுவரின் முறையை நோக்கின் தவறாகும். கயவர் ஒழுக்கம்பிறழ்ந்தனர் என்று எண்ணலே நேர். மற்று, "இஃதென்ன வேற்றுமை; கயவர் மாத்திரம் மக்க ளல்லரோ?" என்று எளிதெண்ணி மயங்கலாகாது. உலகத்திற்கு நன்மை செய்யவேண்டும் என்னும் கருத்தோடு இன்று நடைபெறுகின்ற முயற்சிகள் யாவும் வீணாவதற்குக் காரணமாய் நிற்பது இம் மயக்கமே. ஆயினும், இம்மயக்கம் விளைவதற்கும் ஒருவாறு ஆதாரமிருக்கின்றதென ஒவ்வுவார்போலத் திருவள்ளுவர்,

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்

எனப் பரிகசித்துரைத்து, அதனூடே, கயவர்தாம் மக்கள் எனத்தகுந்தவர் ஆகாமையை அரிதின் வற்புறுத்தியிருக்கின்ற இக்குறள் துயிலினிடையேயும் மறக்கற்பாலதன்று; கனவினிடையேயும் மறக்கற்பாலதன்று. ஆதலின், மக்களே யல்லாதார் தொழிலினின்று மாநுடஇயற்கையைக் கற்பித்து அதன்படி மனித வாழ்க்கையையும் அரசியல் முறையையும் அமைக்க முயல்வது பாழிற்கும் பழிக்குமே வழிதேடியதாகத் தீராமல் என் செய்யும். தற்காலம், மணமுறையை ஒட்டியும், சாதியைச் சார்ந்தும், அரசியலைப்பற்றியும், பொருள்நிலை குறித்தும், சமயங்களைத் தொடர்ந்தும் சீர்திருத்தங்களென்று முயலப்படுவன அனைத்தும், கயமையே மாநுட இயற்கையாம் என்ற எண்ணத்தினுடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. "மனிதர் மனிதராகத்தான் இருப்பார்கள், ஆதலால் இந்தச்சட்டம் இந்தச்சீர்திருத்தம் வேண்டும்" என்னாமல், "கயவர் குணம் இவ்வாறு இருக்கின்றது, ஆதலின் இந்தச் சட்டமும் சீர்திருத்தமும் செய்யவேண்டும்" என்று சிலர் துவக்குவாராயின் இவைகளின் நோக்கமும் போக்கும் முழுவதும் வேறோர் வழியதாகும்.

ஏனெனில், கயவர் கயவராகவே இருந்து தீரவேண்டும் என்னும் நியதி எங்கும் இல்லையே. நோய்நிலையை நோய்நிலை யென்றுணராமல்அதுவேதான் இயற்கையாகிய நேர்நிலைஎன நினைத்துஅதற்குத்தக்கபடி மற்றவைகளை அமைப்பதற்கும், இதற்கெதிர், நோயை நோயே என்று தெரிந்து, அந்நோய் நீங்கிச் சுகநிலை அடைவதற் குரியவைகளை முயல்வதற்கும் இடையே கிடக்கின்ற வேற்றுமை சிறியதன்று. இவ்விரண்டில் எவ்வகை உணர்வினால் ஒன்றினை முயல்வது தீதற்ற நன்மைதரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆதலின், தீயனவாய் நிகழ்வன வனைத்தும் மாநுட இயற்கையின் தூண்டல்களே என்ன அலமருதலின்றி, அவை கயமையின் காரியங்களாவதைக் கருத்துட்கொண்டக்கால், மாநுட இயற்கை யென்னும் ஒரு பொய்ப்பூதத்திற்குக் காவல்கள்செய்து வீணே கழியாமல், கயமையை மாற்றுவதற்கு ஏதேனும் ஒருவழியுளதோ என்பதுபற்றிச் சிந்திக்கப் புகுபவராவோம். அப்பொழுது உண்மையான மேன்மை இன்னதென்று தெரியவரும். வருதலும்,

Why is this noble creature to be found
One only among thousands? What one is
Why may not mankind be?

[ஆயிரம் ஆயிரத்தினுள் ஒருவாராக உயர்ந்தோர் ஏன் காணப்படுகின்றனர்? சான்றோன் ஒருவன் இருக்கின்ற வண்ணம் மாநுட இனத்தவ ரனைவரும் ஏன் இருக்கலாகாது?]

என்று ஷெல்லி, வோர்ட்ஸ்வோர்த், முதலிய புலமை மிகுந்த பெருந்தகையினரோடு, உறுபொருள் ஒக்கக் கண்டு, கயமையை மாற்றுதற்குரிய பண்பமைந்த வழிகளையே பயன்பட நாடும் நம் மனம்.

இதுகாறும் எம்கட்டுரையின் கருத்தினைத் தொடர்ந்துவந்தவர், கயமை தீரும்படி முயல்வதற்கு எவ்வெவ்வழிகள் உளவென்று அவரவர் கல்விக்கும் அறிவிற்கும் அநுபவத்திற்கும் ஏற்பச் சிந்திக்கத் தலைப்படுவதே தக்கதாகுமன்றி, எல்லாரும் நல்லோராய் இவ்வகலிடத்துலகின்கண் என்றேனும் இருந்ததுண்டோ, மற்று இருக்கத்தான் இயலுமோ என்று மலைவுற்று மனஞ் சோர்ந்து, "நாம் எண்ணுமாறு அமைக்க இயலாதாதலின், இருக்குமாறு இருந்து கழிவதே கருமம்" என முழங்குவதும் முயல்வதும் நன்மதியின் திறமன்று—எளிமையினும் எளிமை. குடிவாழ்க்கையின் மேன்மைகளை வகுத்துக் காட்டிய ப்ளேட்டோ என்னும் அந்தக் கிரேக்கநாட்டு வித்தகர்—

"நான் சித்தரித்துரைத்த இதுபோன்ற ஒரு நாடு பூலோகத்தில் இருக்க இயலாத நாடெனக் கருதினாலும் என்? அத்தகைய தெய்வச் சிறப்புடைய ஒரு முறையை இவ்வுலகினிற்கு அழைத்து அமைக்க விரும்புபவர் செவ்வியோர். அத்தகைய ஒரு நாட்டின் குடிகளாய் அமைதற்குரியபடி வாழ்க்கையைத் திருத்திக்கொள்ளத் தலைப்படுவர் மேலோர். அது முடியுமா முடியாதா என்று அயிர்த்துத் தமொறமாட்டார் வித்தகர்.

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயம்பிய உரைகளை மறவாதார் இவ்விடயத்தில் தேறிய உள்ளத்தவராகி, சோர்வற்ற ஊக்கத்தைச் செவ்விதின் பெற்றவர்களாவார்.

# தமிழ்ப் பாடம் 53.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[25-வது பக்கத் தொடர்ச்சி]

காயுங் கடக்களிற்றாய் கார்க்கோ டகனென்பேர்
நீயிங்கு வந்த தியானினைந்து—காயத்தை
மாறாக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேறாக்கிற் றென்றான் விரைந்து. 12.

பொழிப்புரை:— "கோபம்பொருந்திய மதயானைகளையுடைய அரசனே, கார்க்கோடகன் என்பது என்னுடைய பெயர். நீ இங்கு வந்திருப்பதை நான்நினைத்து, நீ உன்னுடைய உருவத்தைமாற்றிக்கொண்டொருவருக்கும் தெரியாமல் வசிக்கும்பொருட்டு நான்(இவ்விதம் உன்னைக் கடித்து) உருவத்தை வேறாக ஆக்குவது ஆயிற்று" என்று விரைந்து கூறினான்.

---

கூனிறால் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிறால் பாயுந் திருநாடா—கானில்
தணியாத வெங்கனலைத் தாங்கினா யிந்த
அணியாடை கொள்கென்றா னாங்கு. 13.

பதப்பிரிவு:—கூன் இறால் பாய குவளை தவளைவாய் தேன் இறால் பாயும் திரு நாடா, கானில் தணியாத வெம் கனலை தாங்கினாய் இந்த அணி ஆடை கொள்க என்றான் ஆங்கு.

பதவுரை.

கூன் - வளைந்திருக்கின்ற
இறால் - இறால் மீன்கள்
குவளை - குவளையில்
பாய - பாய்வதினால்
தவளை - தவளையினது
வாய் - வாயில்
தேன் - தேனானது
இறால் - தேன்கூண்டிலிருந்து பாய்வதுபோல்
பாயும் - பாய்கின்ற
திரு - அழகிய வளப்பம்பொருந்திய
நாடா - நாடனாகிய நளனே,
கானில் - காட்டில்
தணியாத - ஆறாத
வெம் - கொடிய
கனலை - நெருப்பை
அதற்குமாறாக
தாங்கினாய் - நீ (என்பொருட்டு) பொறுத்தாய்,
அணி - அழகிய
ஆடை - வஸ்திரத்தை
கொள்க - பெற்றுக்கொள்"
என்றான் - என்று கூறினான். (ஆங்கு அசை)

விரிவுரை:—தேனிற்கு ஆசைப்பட்ட தவளை பூவினின்று குடிக்க வகையறியாமல் குவளைக்கு அயலில் வாயைப்பிளந்துகொண்டிருக்க, அப்பொழுது இறால் மீன் அக்குவளைக்குள் குதிக்கவும் அம்மலர் சாயவே அதனுள்ளிருந்த தேன் சரிந்து, கூண்டிலிருந்து பாய்வதைப்போலத் தாரையாய் அத் தவளையின் வாய்க்குள் விழுந்துவிடுகின்ற தென்பது, இந்தச்செய்யுளில் அடங்கிய இயற்கையின் சிறு நாடகமொன்று. இப்படிச்சொல்லி நளனை அழைப்பதில் உள்ளுறை உவமம் ஒன்று அடங்கி யிருக்கின்றதோவென்று எண்ணுதற்கு இடம் இருக்கின்றது. கிடைக்கக் கூடாத தேன், அங்காந்திருந்த தவளையின் வாயில் குவளையிலிருந்து எவ்வாறு இறால்மீன் குதிப்பதால் பாய்ந்ததோ அவ்விதமே, நளனுடைய செல்வம், கலியின் செய்கையால் புட்கரனைச் சேரலாயிற்று.

---

சாதி மணித்துகிலே சாத்திறாற் றண்கமழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா டேட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநா ணீங்கு முரு. 14.

கருத்து:—"உனக்கு இந்த உரு நீங்கிப் பழைய உருவம் எப்பொழுது வரவேண்டும் என்று தோன்றுகின்றதோ,அப்பொழுது இவ்வஸ்திரத்தைப்போர்த்துக்கொள்வாயானால், அப் பழைய உருவம் வந்துவிடும்" என்று கார்க்கோடகன் நளனுக்குச் சொன்னானென்பது இச்செய்யுளின் கருத்து.

---

வாகு குறைந்தமையால் வாகுகனென் றுன்னாமம்
ஆக வயோத்தி நகரடைந்து—மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்மனத்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து. 15.

கருத்து:—"வாகு (தோள்கள்) குறைந்த காரணத்தால் நீ வாகுகன் என்ற பேர் வைத்துக்கொண்டு, அயோத்திமா நகரத்தை அடைந்து அங்குத் தேர்த்தொழிலில் சிறந்த சாரதியாகி இரு" என்று கார்க்கோடகன் நளனுக்குக் கூறினான்.

விரிவுரை:—ஆகையால், செய்ந்நன்றிக்கு மாறாகத் தீங்கு செய்யவேண்டும் என்று கார்க்கோடன் நளனைக் கடிக்கவில்லை. ஏழுலகும் நின்ற கவிகை நிழல் வேந்தனாயிருந்த இந்நளவேந்தன் வறுமையுற்று நாடு நாடாய்த் திரிகின்றபோது தன்னைப் பிறர் பார்க்குந்தோறும் அவமானத்தால் அவனது உடல் கூசிக்கூசி மனமும் பதைக்கும். இந்தத் துன்பத்திலிருந்து அவனைக் காக்கும்பொருட்டே கார்க்கோடகன்,அவனது அடையாளந் தெரியாதபடி உருவத்தை மாற்றிய உதவி செய்தான். எனவே, கடித்தபோது தீங்கு செய்ததுபோல் தோன்றினாலும் உண்மையிலே கார்க்கோடகன் கருத்து நளனுக்கு உதவி செய்வதாகவே இருந்தது. பெரும்பாலும் இவ்வுலகத்தில் பிறர் நமக்குத் தீங்கே செய்ய நினைத்தார்கள் என்று அவர் காரியத்தின் வெளித்தோற்றத்தைக்கொண்டு அவசரப்பட்டு மதித்துவிடுகின்றோம். மதித்துத் தீங்குபோல் தோன்றுகின்ற அந்த நன்மையின் பயனை அடையாமல் கெடுத்துக்கொள்வது சாதாரண ஜனங்களின் தொழில். "என்னைக் கடித்தாயா, ஏ நன்றிகெட்ட பாம்பே" என்று நளன் அதனைக் கொன்றுவிட்டிருப்பானாயின் அவன் கதி என்னவாயிருக்கும். மறுபடி இவ்வுருவத்தை முன்போல் அடையக்கூடிய வஸ்திரத்தைப் பாம்பினிடத்திலிருந்து பெறாமல் எந்நாளும் வாகுகனாகவே கிடக்கவேண்டியதுதான். பிறர் தனக்குத் தீமை செய்தார்கள் அல்லது செய்வார்கள் என்று எண்ணுவது பேதைமை மாத்திரமல்லாது, அடிமைப் புத்தி என்பதும் அதுதான். நளன் மகா உத்தமனாதலால் அவ்வாறு எண்ணாதது அவன்

இயற்கையாயிற்று. "சீற்றம் ஒன்று இன்றிச் சின எயிற்றால் என் உருவத்தை மாற்றுதற்கு என்ன காரணம்" எனத் தக்க காரணம் இருக்கவேண்டும் என்னும் நிச்சயத்தோடு மிகவுஞ் சாந்தமாய்க் கேட்டதை மறப்பதருமை.

நன்மை செய்யவேண்டும் என்னும் கருத்தோடு தீங்குபோல் தோன்றுகின்ற ஒரு காரியத்தைச் செய்ததற்கு உதாரணம் இக்கார்க்கோடகன் செயல். ஆனால் நமக்குத் தீமையே செய்யவேண்டும் என்னும் எண்ணத்தோடேயே பிறர் புரிகின்ற செயல்களும் சில உள. இவைகளுங்கூட, வெளிப்பார்வைக்கும், தத்துவஆராய்ச்சியில்லாத மனதிற்கும் மாத்திரமே தீங்குபோல் தோன்றுவனஆகும். ஆழ்ந்து கருதிஅனுபவத்தையும் சேர்த்து ஆராய்ந்தால், தீமைகளாகக் கருதிச் செய்யப்படுகின்ற இவைகளுங்கூட அந்தத்தில் நன்மையேயாகின்ற உண்மை ஐயமின்றி விரைவில் தெரியவரும். முன் னுதாரணத்தில், செய்பவன் நன்மையென்று கருதிச் செய்ய, அதைச் செய்யப்படுபவன் தீங்கு என்று எண்ணலாகின்றான். ஆதலால் அது, ஒருவனுக்கு நன்மையென்று தெரிந்திருக்க மற்றவனுக்குத் தீங்குபோல் தோன்றுகிறது. எனவே, அதன்நன்மை செய்பவனுக்குத் தெரியும், செய்யப்படுபவனுக்குத் தெரியாது. இனி, தீங்கே செய்யவேண்டும் என்று எண்ணி ஒருவன் செய்யும்போது அக்காரியத்தின் நன்மை, செய்பவன் செய்யப்படுபவன் இருவருக்குந் தெரியாது. இவ்விருவர் அறிவிற்கும் மேலான ஒரு அறிவிற்கே தெரியும். இதுதான் இவ்விரண்டுவகைச் செயல்களுக்கும் உள்ள வித்தியாசம். 'நளவெண்பா' கவியழகில் மாத்திரமல்லாமல் கருத்தின் பெருமையினும் குறைந்ததன்று. நளன் தமயந்தி போன்ற நல்லோர்தம் குணங்களை உரைப்பதும் கேட்பதும் மிக நன்று.

---

இணையாரு மில்லா னிழைத்த வுதவி
புணையாகச் சூழ்கானிற் போனான்—பணையாகத்
திண்ணாக மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும்
எண்ணாக வேந்த னெழுந்து.

பதப்பிரிவு:—இணை யாரும் இல்லான் இழைத்த உதவி புணை ஆக சூழ் கானில் போனான் பணை ஆகம் திண் நாகம் ஓர் எட்டும் தாங்கும் திசை அனைத்தும் எண் ஆக வேந்தன் எழுந்து.

அன்வயம்:—வேந்தன், இணை யாரும் இல்லான் இழைத்த உதவி புணையாக, பணை ஆகத் திண்நாகம் ஓர் எட்டும் தாங்கும் திசை அனைத்தும், எண் ஆக எழுந்து சூழ் கானில் போனான்.

பதவுரை.

வேந்தன் - நளவேந்தன்,
இணை - தனக்குச் சமானம்
யாரும் - ஒருவரும்
இல்லான் - இல்லாதவனாகிய கார்க்கோடகன்
இழைத்த - செய்த
உதவி - உதவி
புணை ஆக - தனக்குத் துணையாக,
பணை - பருத்த
ஆகம் - உடலின்
திண் - வலிமையை யுடைய
நாகம் - யானைகள்
ஓர் எட்டும் - எட்டும்
தாங்கும் - சுமக்கும்
திசை அனைத்தும் - திக்குகளிலெல்லாம் இவனுருவத்தைக் கண்டவர் பரிகசிப்பதால்
எண் ஆக - எளிமை அடையும்படி,
எழுந்து - எழுந்து
சூழ் - சூழ்ந்த
கானில் - காட்டில்
போனான் - போனான்.

## இலக்கணம்

ஒலியினது அணுக்கள் சேர்ந்தால் எழுத்து ஆகும். எழுத்துக்கள் சேர்ந்தால் சொல்லாகும். சொற்கள் தொடர்ந்தால் வாக்கியமாகும். வாக்கியங்கள் சேர்ந்து ஒரு விஷயத்தைப் பற்றிக் கூறுவது கட்டுரை. கி என்பது ஒரு எழுத்து. கிளி என்பது கி ளி என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து ஆன ஒரு சொல். கிளி கூவியது, என்பது கிளி கூவியது என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து ஆன ஒரு வாக்கியம். "கிளி பச்சை நிறமான ஒரு பறவை. அது மரத்தில் வசித்துக் கனிகளைத் தின்று வாழும். அதன் குரல் செவிக்கு இனிமையானது. கிளியின் பேச்சை மாதர்களது மழலைக்குக் கவிகள் உவமையாய்க் கூறுவர்"... என்னும் இதுபோன்ற பல வாக்கியங்கள் சேர்ந்து ஆவது கட்டுரை.

ஆனால், எழுத்துக்களெல்லாம் ஒலியால் ஆகின்றன என்றாலும் ஒலியெல்லாம் எழுத்தாகா. அப்படியே, எழுத்துக்கள் சேர்ந்து சொல் ஆகின்றன என்ற போதிலும், எப்படி எழுத்துக்கள் பல சேர்ந்தாலும் அவை சொல் லொன்று ஆகத்தான் வேண்டும் என்னும் நியதியில்லை. சொற்கள் தொடர்ந்து வாக்கியங்கள் ஆகின்றன என்றதினாலேயே, சொற்கள் எப்படித் தொடர்ந்தாலும் அவை வாக்கியமாய்விடும் என்றும்எண்ணப்படாது. அவ்விதமே, வாக்கியங்கள் பல சேர்வது மாத்திரம் கட்டுரை ஆவதற்குப் போதாது. எனின், இவை இவை எப்படி இருக்கவேண்டுமென்று பார்ப்போம.

### எழுத்து.

ஒலியால் ஆவது எழுத்து. அ ஆ இ ஈ போன்றவைகளும், க் ங் ச் ஞ் போன்றவைகளும் க கா கி கீ ச சா சி சீ போன்றவைகளும் எழுத்துக்கள். இப்படி எழுத்துக்கள் என்று சொல்லத்தக்கவை எவை? அ என்னும் சப்தம், ச் என்னும் சப்தம், சு என்னும் சப்தம் எழுத்துக்கள். இதுபோன்றே பிற சப்தங்கள் அல்லது ஒலிகளை நாம் அறிந்தவாறு மற்ற எழுத்துக்களும் ஆகின்றன. அ ச் சு என்னும் இம் மூன்று ஒலிகளுஞ் சேர்ந்தால் அச்சு, என்னும் அர்த்தத்தைத் தரக்கூடிய வொரு சொல்ஆகும். இப்படிச் சொற்கள் ஆகக்கூடியனவாயிருக்கின்ற ஒலிகளையே எழுத்தென்று சொல்லவேண்டும். தும்மல் இருமல் கையோடு கைதட்டல் இவைகளெல்லாம் ஒலிகளே ஆனபோதிலும் அந்த ஒலிகளைச் சேர்த்து அர்த்தம் தரக்கூடிய வார்த்தை ஒன்றும் உண்டாக்க முடியாதாகையால் இவைகளும் இவைபோன்ற பிற ஒலிகளும் எழுத்துக்கள்ஆகமாட்டா. ஆகையால், மொழி அல்லது ஒரு சொல் உண்டாவதற்கு முதற்காரணமாய் எந்த எந்த ஒலிகள் இருக்கின்றனவோ அவ்வொலிகளே எழுத்துக்கள்என்பதற்குஉரியனவாகும்.

இந்த எழுத்துக்கு உரியதாயிருக்கின்ற ஒலி பாஷைக் குப்பாஷை வேறுபடும். ழ் என்கின்ற ஒலி 'மூழ்கு' என்ற சொல்லிற்குக் காரணமாயிருப்பதால் இதைத் தமிழ்ப் பாஷைக்குரிய வொரு எழுத்தென்போம். ஆங்கிலத்தில் ழ் அல்லது ழ ழா வரிசையிலுள்ள சப்தத்தோடு சேர்ந்த வார்த்தைகளே இல்லை. ஆகை யால் இந்த வரிசை ஒலி ஆங்கில பாஷையில் எழுத் தாகாது; மற்று, தமிழ்ப்பாஷையில் ஆகும். அவ்விதமே f என்ற ஒலி fat, calf என்பனபோன்ற அர்த்தத் தைத் தருகின்ற ஆங்கிலமொழிகளுக்குக் காரணமா யிருப்பதால் அது அப்பாஷையின் எழுத்தாகும்; தமிழிலே இந்த ஒலி சேர்ந்த வார்த்தைகள் இல்லை யாகையால், f என்ற ஒலி தமிழில் எழுத்தென்று வாராது.

---

# வாழி தோழி

## [ஓர் கார் நாடகம்]

[29-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 2. களம் 1.

[பாசறை]

[முன்பு தலைமகன் "எத்தகைய தொழிலாயினும் அது கிடக்க, நாம் நமது செல்வியிடத்துச் செல்வோம்' என்று நெஞ்சொடு கூறியவன், இப்பொழுதும் தன் மனத்தொடு கூறிக்கொண்டு, பின்பு பாகனைத் தேர் செலுத்துமாறு கூறித் தேர்மீது இவர்கின்றான்.]

தலைமகன்:—(பாசறையில் தனித்திருந்து தனது மனத்தை விளித்துச் சொல்கின்றான்.)

இமிழிசை வானம் முழங்கக் குமிழின்பூப்
பொன்செய் குழையிற் றுணர்தூங்கத் தண்பதம்
செவ்வி யுடைய சுரநெஞ்சே காதலியூர்
கௌவை யழுங்கச் செலற்கு.

[மனமே! மேகம் இயமரம் என்னும் பறையினது ஓசை யைப்போல் ஒலிக்கின்றது; பொன்னாற் செய்யப்பட்ட காதணிபோல் குமிழினது பூக்கள் கொத்துக்கொத்தாய்த் தொங்குகின்றன; காதலியிடத்து யான் குறிப்பிட்டுவந்த பருவம் வந்தும், அவள்பால் செல்லாமல் இன்னும் இங் குத் தாமதித்தமையால் யான் பொய்த்தேன் என்று ஊரில் பழிச்சொல் பெருகியிருக்கும்; ஆதலின் அப்பழிச்சொல் கெட இன்றே புறப்படல் வேண்டும்; அதற்குத் தக்கபடி நாம் செல்வதற்குரிய அரிய வழிகள் குளிர்ந்த பக்குவத் தையும், செவ்வியையும், அடைந்திருக்கின்றன. (பாகனைப் பார்த்துக் கூறுகின்றான்.)

பொங்கரு ஞாங்கர் மலர்ந்தன தங்காத் [டல்
தகைவண்டு பாண்முரலுங் கானம்—பகைகொண்
எவ்வெத் திசைகளும் வந்தன்று சேறுநாம்
செவ்வி யுடைய சுரம்.

[பாகனே, இந்தக் காட்டின் பக்கத்துள்ள சோலைகள் எல்லாம் பூத்தன; ஓரிடத்திலும் தங்காமற் பறந்து திரியும் வண்டுகள் இசைப்பாட்டை ஒலிக்கின்றன; மேகங்கள் ஒன்றோடொன்று பகைத்து எழுந்தனபோல் எல்லாத் திசைக்கண்ணும் வாராநின்றன; செல்லுதற்கரிய வழிக ளும் நல்ல நிலைமையில் உள்ளன; ஆதலால் நாம் நமது ஊருக்குச் செல்வோம்.]

தேர்ப்பாகன்:—ஐய! தங்கள் ஆணைப்படி இதோ குதிரைகளைத் தேரிற் பூட்டிக் கொணர்ந்திருக்கின் றேன்; இனி, தங்கள் திருவுளப்படி நடக்க வுள்ளேன்.

தலைமகன்:—

வரைமல்க வானஞ் சிறப்ப வுறைபோழ்ந்
திருநிலம் தீம்பெயல் தாழ—விரைநாற
வூதை யுளருந றுந்தண்கா பேதை
பெருமடம் நம்மாட் டுரைத்து.

[பாகனே நன்று நின்செயல்! மலைகள் வளப்பமடைய வும், வானம் சிறப்படையவும், பெரிய பூமியை நீர்த்துளி களால் ஊடறுத்து இனிய மழை வீழ்கின்றது; அதனால் முல்லைமுதலிய செடிகள் அரும்பவிழ்ந்து மலர, அவற்றின் மணம் எங்கும் பரவுமாறு குளிர்காற்றுப் பேதையாகிய தலைவியினது மிக்க அறியாமையை நம்மிடத்து அறிவித்து நறிய குளிர்ந்து சோலையில் அசையாநிற்கும்; ஆதலின் நீ தேரை விரையச் செலுத்துவாய்.]

---

### களம் 2.

[காட்டின் நடுவழி]

தலைமகன்:—

கார்ச்சே ணிகந்த கரைமருங்கி னீர்சேர்ந்
தெருமை யெழிலே றெறிபவர் சூடிச்
செருமிகு மள்ளரிற் செம்மாக்குஞ் செவ்வி
திருநுதற் கியாஞ்செய் குறி.

[அன்புடையாய், இதோ பார்த்தனையா! அழகிய எரு மைக் கடாக்கள் மேகமண்டலத்தையுங் கடந்துஉயர்ந்த மலைப்பக்கத்து மடுவின் நீரில் வீழ்ந்து உழக்கி, அதனால் அம்மடுவில் துணிக்கப்பட்ட கொடிகளைச் சூடிக்கொண்டு, மறம் மிகுந்த போர்வீரரைப்போல இறுமாந்திருக்கின்ற அழகு! அழகிய நுதலையுடைய எனது காதலியிடத்து நாம் மீளுங் காலத்திற்குச் சொல்லிய குறி இதுதான்! ஆதலின் தேரை விரையச் செலுத்து; காலந் தாழ்ப்பின் அவள் மனம் ஒடிந்து வருந்துவாள்.]

கடனீர் முகந்த கமஞ்சூ லெழிலி
குடமலை யாகத்துக் கொள்ளப் பிறக்கும்
இடமென வாங்கே குறிசெய்தேம் பேதை
மடமொழி யெவ்வங் கெட.

[அதுவுமன்றி, அறியாமைமிகுந்த அம் மடமொழியா ளுக்கு, எனது பிரிவால் உளதாகும் துன்பங் கெடச் சொல் லிய அறிகுறி மற்றும் ஒன்றுளது; அவ் வறிகுறியும் இதோ நிகழ்ந்துளது பார்! கடல்நீரை முகந்ததனுலுண் டாகிய நிறைந்த சூலினையுடைய மேகம் நமதூர்க்கு மேற் றிசையில் உள்ள மலையினது நடுவிடத்தைக் கவிழ்ந்து கொண்டது; 'இங்ஙனம் நிகழுங்காலை நான் மீண்டு வந்து விடுவேன், அன்றே, நின் பிரிவுத்துன்பங் கெட இடம் பிறக்கும், என என் ஆருயி ரனையாளிடத்துக் கூறிவந் தேன்.]

கடாஅவுக பாகதேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போல்
படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம்
பிடாஅப் பெருந்தகை நற்கு.

[ஆதலின், பாகனே, தேரைவிரையச்செலுத்துக? அழித லில்லாத புகழைவிரும்புகின்ற செல்வர் மனம்போல் குறை தலில்லாத மகிழ்ச்சியையுடையவண்டுகள், காட்டின்கண் உள்ள பிடவஞ்செடிகளாகிய பெருந்தகையாளரிடத்து நன்றாக இசைப்பாட்டைப் பாடுகின்றன; இவற்றையெல் லாம் காணக்காண என் நெஞ்சம் எனது உயிரனையாளைக் காண விழைகின்றது]

களம் 3.

[தலைவியின் மாளிகை]

[தலைவியினது மாளிகையின் ஒரு புறத்தில் தனித்தி ருந்த தோழி கார்காலந்தொடங்கி நாட்கள் பலவாகியும், தலைவர் வாராமையால் "தலைவர் வருவாரோ, அன்றி மறந்தனரோ; தலைவிக்கு எத்தகைய ஆறுதல் மொழிகள் கூறுவேன்" என்று வருந்துகின்றாள்.]

தோழி:—(தனிமையில்)

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்
பெருவிறல் வானம் பெருவரை சேரும்
கருவணி காலங் குறித்தார் திருவணிந்த
ஒண்ணுதல் மாதர் திறத்து.

[மிக்க பெருமையையுடைய மேகம் விரியும் அலையை யுடைய கடல்நீரை வெறுக்கும்வண்ணம் நிறைய வுண்டு பெரிய மலையை அடையாநின்ற காலத்தையன்றோ எம் தலைவர் தாம் மீண்டுவருங்காலமென்று, சீதேவியென்னும் தலையணியை அணிந்த, ஒளிபொருந்தியநெற்றியையுடைய எம் செல்வியின்பொருட்டுக் கூறிச்சென்றார்; அவர்கூறி யவண்ணம் நிகழ்ந்தும், அவர்மட்டும் இன்னும் வரவில் லையே ?]

சென்றநங் காதலர் சேணிகந்தா ரென்றெண்ணி
ஒன்றிய நோயோ டிடும்பை பலகூர
வென்றி முரசி னிரங்கி யெழில்வானம்
நின்று மிரங்கு மிவட்கு.

[வினைவயிற் பிரிந்த நம் தலைவர் நெடுந்தூரங் கடந்து சென்றனராதலின் இன்னும் வந்திலர்' என்று நினைந்து பொருந்திய பசப்புநோயுடனே துன்பங்கள் பலவற்றால் எம் செல்வி வருந்துகின்றாள்; அழகுமிக்க மேகம் அவள் துயரைக் காணச் சகியாமல், அவளைத் தேற்ற முயல்வது போல், இதோ நின் காதலர் வந்தனர்! நின் துயர் ஒழிக! என்று கூறுவதுபோன்று, வெற்றி முரசென ஒலிசெய்ய; அதனால் அவளுடைய துயர் மிகுதலைக் கண்டு 'அந்தோ! இவள் துயர்நோய்க்குக் காதலன் வருகையன்றி, வேறு மருந்திலையே, என்று மனமிரங்கிக் கண்ணீர் சொரிவது போல் தாரை தாரையாக விடாது மழை பெய்கின்றதே! முகிலும் இவள்திறத்து மனம்பொருமி நீர் சொரிய இவர் மனமிளகி இன்னும் வந்திலரே! என்செய்வேன்! ஏழை யேன் கூறும் மொழியால் இவள் மனம் ஆறும் நிலையிலோ இல்லையே.]

# தேவகி

## அத்தியாயம் 2.

[32-வது பக்கத் தொடர்ச்சி]

குடந்தைமாநகரில் என் மாமன் மனையினில், மாமி யின் பரிவும் மக்கள் உறவும் கைதர நான் வளர் ந்தவிதம் கூறினேன். இனிப் பள்ளியில் நான் கல்வி கற்ற விதமும் கூறுவேன். என் மாமன் மனைக்கருகு காவிரியின் வடகரையில் பெண்பிள்ளைகளுக்கெனக் குடந்தைச் செல்வர்களின் முயற்சியால் நிறுவப்பெற் றிருக்கின்ற கலைமகள் பெண்பாடசாலையில், நானும் கோமளமும் படித்துவந்தோம். இப்பள்ளியின் தலை மையை அசோதை என்னும் மாது பெற்றிருந்தாள். அவள் குணநலம் உள்ளப்பெருமை முதலியவைகளை அறியவேண்டுமெனின், அன்னதற்கு இடம் என் மாமியின் வாயேயாகும். அசோதையம்மாளது திரு மேனி வண்ணத்தை என் மாமியின் உள்ளத்து இரு ளுடன் உவமிப்பதல்லால்வேறொன்றும் என்னுடை ய சிற்றறிவிற்கு எட்டவில்லை. என்மாமியின் யாக்கை யேபோல் இவள் திருமுகமண்டலம் மிக அகன்றிருந் தது எனின், அவளெழிலைச் சொற்கொண்டு உரைப் பதும் எளியதாமோ. மிகவகன்ற அவள் தலையினுள் இருந்தபுத்தியின் எல்லையோ மிகச்சிறியது. இத்தகைய நலத்தகையாள் கோலோச்சும் பள்ளியினில் நான் பயிலலானேன்.

கூரிய மதியும் சீரிய ஒழுக்கமும் உடையவர் இடத் தில்தான், போதிக்கும் உபாத்தியாயர் அன்புகொள் வர் என்பது உலகவியல். ஆயினும் எம் பெருந்தலைத் தேவி அசோதை உட்கொண்ட கொள்கையோவேறு. சிற்றினச்சிந்தனைகள் உறையுமிடமான உள்ளமுடை ய எம் பள்ளித்தலைவி அசோதையின் அருமைக்குப் பணமுடையவர் வீட்டுப்பெண்கள்தாம் எல்லாவகை யினும் உரியாராவார். எளியவர் மக்கள்மாட்டு அவளது அகன்றவாய் வன்சொல்லி னல்லாது திறக்கும் பழக் கதைப் பெற்றதில்லை. இனம் இனத்தையே சேரும் என்ற முதுமொழி பழுதாதல் இயலுமோ. எனவே என் மாமியின் நட்பை இவள் மிகப் பெற்றவள். என் மாமியின் நெருங்கிய நட்புடைய ஒருத்தி, நான் படிக்கும் பாடசாலைக்குத் தலைவியாயிருந்தனள் என் னின், அங்கு எனது நிலை எவ்வாறிருக்கும் என்பதை நான் வகுத்துரைக்க வேண்டுமோ? பள்ளியில் புகுந்த நாள்தொட்டு நான் எவ்வகுப்பிலும் இரண்டு வரு டம் தங்கி இருந்ததில்லை. அன்றன்று பாடங்களையும் செவ்வனே படித்துவிடுவேன். அசோதை தவிர ஏனை யோர் அனைவரும் என்னை 'நல்லபெண் இவள், சாது, கெட்டிக்காரி' என்று கொண்டாடுவர். அவளுக்கு மாத்திரம் நான் கண்ணையுறுத்தும் கோதானேன். மாமியின் மந்திரம் தலைபற்றியிருக்கையில் அந்தப்பள் ளித்தலைவி என்செய்வாள். மாமியை மகிழ்விக்கவேண் டாவோ. நாள்தோறும் என் வகுப்பிற்கு வந்து நான் இழைத்திராக் குற்றம் பல என்மீது ஏற்றி என் உட லொடு உள்ளமும் நையப்புடைப்பதால் மாமியின் உறவை உரம்பெறச் செய்துகொள்வாள்.

இப்பெருந்தகையாட்டி ஒருநாள் மாலை வழக்கப் படி என் மாமன்மனைக்கு வந்தாள். வந்தவளை என் மாமி மிக்கமகிழ்வுடன் வரவேற்று, நீண்டநேரம் வார் த்தையாடினாள். குடந்தையில் கூடிய மாதர்நலக் கூட் டத்தில் என் மாமி நிகழ்த்தியவொரு சொற்பொழி வைப்பற்றித் துவக்கமான பேச்சு மெல்லமெல்லப் பெண்பாலார் அரசாங்கத்தில் அதிகாரங்களை வகிக்க வேண்டிய அவசியத்தைத் தொடர்ந்தது. என்மாமன்

மந்திரிப் பேறுபெற இசையாமற்போகவே, மன மழிந்த என் மாமி பெண்பாலார் ஏன் மந்திரிப்பதவி பெறக்கூடாது என நினைக்கலானாள். அவ்வெண்ணம் வரவர வன்மையுறலாயிற்று. வன்மையுற்று வளர்ந்த இவ்வெண்ணம் மந்திரியாகக்கூடிய மாதும் தானேயா யிருக்கலாகாதோ என்ற முடிவினைத்தந்தது. முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார் என்று அன்றொரு நாள் ஜனநலத் தொண்டர் சேகரனார் நன்மனைவி ஓதி வைத்த வாசகம் அளித்த ஊக்கத்தால் கிளர்ந்த என் மாமியின் மனம் இன்று பெண்ணுரிமைப் பேச்சினில் எல்லையற்ற ஆர்வங்காட்டிப் பெருகியது.

"மேனாட்டு மாதரார், ஆடவர் நாணும்படி, விண்ணி லும் பறக்கின்றனர். பெண்ணினத்தார் ஆற்றல் இது கண்டும், இந்நாட்டார் இன்னும் துயில்வது வியப்பை யே தருகின்றது. இனியும் பெண்ணை அடக்கியாள நினை க்கும் ஆடவர் பேதையர். வானை யளப்பவர் மண்ணை ஆள மாட்டாரோ," என்று பெருமிதத்துடன் என் மாமிஉரைசொரிய,காதொடு தன்னையும்என்மாமியின் வாய்க்கு அளித்தவளாய் இருந்த அசோதை, "ஏன் ஆளார், உலகாளும் உரிமை தனக்கென்று திரிகின்ற ஆடவரை அடக்கியாளும் மெல்லியலார் மண்ணொடு விண்ணையும்ஆள்வதும்அரியதொருசெயலாமோ.இது வரைப் பெண்களுக்கு ஆடவர்தம் சுயநலம் மறுத்தி ருந்த உயர்தரக் கல்வி இனிக் கைவந்து கூடுமாயின் பின் வேண்டுவது ஒன்றுமில்லை." என்று தொடர்ந்து முடித்தாள். அசோதை வாய்வழிந்த இச்சகமொழி களை ஆர்வமுடன் கேட்டனள் என் மாமி; கேட்டு, 'கோசிக முனிவனும் நிலைகுலைந்தான் என்றால், மெல் லியலார் புருவக்கடை உலகையெலாம் வெல்வதற் குப் போதாதோ; கல்வியும் ஒன்று வேண்டுமோ? என அவ் வருங்கால மந்திரி விம்மினாள்.

"உயர்தரக் கல்வியும் வந்து வாய்க்குமானால் பின் வெற்றிக்கும் ஆற்றலுக்கும் உறைவிடம் பெண்கள் தாம் அல்லரோ" என்று தொடர்ந்த அசோதையைப் பார்த்து "அசோதாய், நன்று சொன்னாய். நம் நாட்டி லும் பெண்கள் சிறிது முன்னேறி வருகின்றனர்..." என்றனள் என் மாமி.

"ஏன் சிறிது! ஆடவர் கலங்கும் வண்ணம் தைய லார் பெரிதும் முன்னேறி வருகின்றார். நாடக மே டையும் ஏறிவிட்டார், அரசியல் துறையிலும் முன் னணி நிற்கின்றார்; சட்டசபையில் உபத் தலைமை யைத் திறமையுடன் வகிப்பவர் மந்திரிகளாகாரோ?"

"மந்திரம் பேசுவார், தந்திரமும் சூழுவர். மேனாட் டுச் சோதரிகள் எலிசபத்தும் விக்டோரியாவும் நா டாள வில்லையோ!"

"மேனாட்டவர் கிடக்க, நம் நாட்டு 'லக்ஷ்மிபாய்' போரும் புரிந்துள்ளாள்." என்று கூறி, 'ஆனால்...' என்று பள்ளித்தலைவி நிறுத்த, 'என்ன ஆனால்' மிக விரைவில் இவ்வூரில் பெண்மக்கட்கென்று உயர்தரக் கல்விச்சாலை யொன்று நிறுவும் முயற்சியில் ஈடுபட் டுள்ளேன்;" என்று கூறினாள் என் மாமி.

"அம்மா, உங்கள் மதியின் வளத்தைக்கண்டு நான் போற்றுகின்றேன். உங்கள் முயற்சி சிறப்பதாகுக. ஆயி னும் கல்விச்சாலை நிறுவுவதால் உறுதியெல்லாம் கை வரப் பெற்றதாமோ?"

"நின் உரை விளங்க வில்லை. சிறிது விரித்துரை, அசோதாய், எனக்கு."

"பெண்நலம் பற்றிய எவ்வுரையும் ஆடவர்க்குத் தான் விளங்குவதில்லை. சுயநலம் இடைப்புகுவதால் அவர்களுக்கு விளங்கவே விளங்காது. ஆடவர் செல் வாக்கே நிகழ்த்திவைக்கும் அரசாங்கத்திற்கும் விளங் குத லரிது. பெண்ணினத்தாரை உய்விக்கவந்த ஒரு சீமாட்டியான உங்களுக்குமா விளங்கவில்லை; அது பெண்ணினம் செய்த பாவந்தான்."

"என்னுடைய சுயமுயற்சியால் கற்பன கற்றேன்; ஆனாலும் உபாத்திமைத் தொழிலோ நான் புரிந்த தில்லை. போடுவதும் விடுப்பதுமான புதுராட்டம் ஆடியறியேன். எனவே உன் கருத்தை விளக்கி வைப் பாய். செய்வதற்கொன்று உளதாயின் வருகின்ற மாதக்கூட்டத்தில் அதுபற்றி யோசிக்கின்றேன்."

"நாங்கள் ஏற்றுள்ள தொழில் பெருமையுடைய தொழில் எனினும், இந்நாள் இத்தொழிலுடையார் அடைந்திருக்கின்ற நிலைமை நல்லோர் இதயத்தை உருக்கிவிடும். இது, காலத்தின் கொடுமையோ, தைய லார் விதியின் மதியோ நான் அறியேன்."

"உன் உள்ளத்துறையும் கருத்து யாதென எனக்கு விளங்கவில்லை. இம்மறையுரையும் முன்னுரையும் விடுத்து விடயத்தை நேரே சொல்லிவிடு."

"பெண்பாலார் கல்விநலம் பெறுதற்கு உழைக்கின் ற எங்களை யாரும் மனிதஇனத்தோடுசேர்த்து மதிப் பதில்லை. எம்மினத்தவர் இல்லையானால் பெண்கள்தம் வருங்கால மந்திரிநினைவு கனவேயாகும். என்னையே யெடுத்துக்கொள்வோம். கல்லூரியில் இரண்டாண்டு படித்துள்ளேன். ஓதிவைத்தற்குரிய பயிற்சியும் நான் பெற்றுள்ளேன். அப்படியிருந்தும், ஐம்பது ரூபாய் ஊதியம் தர இப்பள்ளி நிர்வாகிகள் மயங்குகின்றார் கள். பண்டை இந்தியாவின் நிலைமையென்ன; அன்று நிலைத்திருந்தசிறப்பென்ன. அந்நாள்ஆசார்யவழிபாட் டின் பெருமை யென்ன. இப்பொழுது என் நிலைமை யென்ன. ஏன் பெண்கள் சிறுமையடையார். தமயந்தி நளாயினி, சாவித்திரி மணிமேகலை, மாதவி, ஆய கலை வல்லுநர் அந்நாள் செழித்திருந்தனர். அப்பேறு இனி எய்தப்பெற வேண்டுமெனில் உங்களைப் போன்றார் இப்பாடசாலையின் நிர்வாகத்தில்அதிகாரம் வகித்து எங்கள் நிலையை உயர்த்த முற்படவேண்டும். உங்களு டையமுன்னேற்றம் எங்களுடையமுன்னேற்றத்திலே தான் இருக்கின்றது. மேனாட்டார் இந்தஉண்மையை அறிந்துளாராதலால் பெண்களும் அங்கு வளர்ச்சி பெற்றுளார். நம்நாடு இதை எப்பொழுதுஅறியுமோ அறியேன். நாட்டின் வளர்ச்சி பெண்களின்முன்னேற் றத்திலும் அப்பெண்களின் முன்னேற்றம், எங்களிட மும் இருக்கின்றது என்பதை அறிந்தவர்களே வாய் மை அறிந்தவர். நான் கோருவதெல்லாம் நம்நாடும், பெண்மக்களும் வளரவேண்டு மென்பதே." என்று சுயநல மற்ற அசோதையம்மாள் மாதர்களைச் சாவித் திரிப் பேறுபெறத் தகுந்தவழியைச் சொன்னாள்.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 தட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களை யும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[18-வது பக்கத் தொடர்ச்சி]

### (iii) அப்பர் எழுத்தியலின் பிரணவதத்துவ விளக்கம்.

திருநாவுக்கரசு, சிவபெருமானை வாழ்த்துவதில், மூலக்கருவென்றும், மூலமுளை யென்றும், மூலவண்ணரென்றும், "நாவாகி நாவுக்கோ ருரையுமாகிய" நாதனைக் குறிக்கின்றார்:—

மூல வண்ணத்த ராய்முத லாகிய
கோல வண்ணத்த ராகிக் கொழுஞ்சுடர்
நீல வண்ணத்த ராகி நெடும்பளிங்
கால வண்ணத்த ராவ ரையாறரே.

திருவையாறு - திருக்குறுந்தொகை 2.

மூல வண்ணமாவது பிரணவமாகிய ஓங்கார சொரூபம். தமிழிலுள்ள எல்லா எழுத்துக்களும் ஓகாரமாகிய பிரணவவெழுத்து அல்லது முளையெழுத்தின் பாகங்களை உடைத்துப் பற்பல வகையாற் பூட்டுதலால் ஆக்கப்பட்டன வென்பதைக் காலஞ்சென்ற P. V. மாணிக்க நாயகர் அவர்கள் "தமிழ் எழுத்துக்களும் அவற்றின் சூக்கும நிலையும்" (The Tamil Alphabet and its mystic aspect) என்னும் அரியதோர் ஆங்கிலக்கட்டுரையில் 1917-ம் வருஷத்தில் வெளியிட்டார். அந்தக்கட்டுரை யுக்திக்கு முற்றிலும் பொருத்தமாய்க் காணப்படினும், எந்த நூல்களை முதல்நூல் அல்லது ஆதரவுகளாகக்கொண்டு ஆராய்ச்சிசெய்தாரென்பது அவர் கட்டுரையில் விளக்கப்பட வில்லை. ஆதலால் அவருடைய உழைப்பைப் பின்பற்றி அதற்கு மேலும் செய்யவேண்டிய ஆராய்ச்சிகளுக்கு வழி அத்துணைச் சுலபமாகக் காணப்படவில்லை. ஆயினும் நமது சமயத் திருமுறைகளில் காணக்கூடிய சான்றுகளைக் கைப்பற்றி நாயகர் அவர்கள் ஆராய்ச்சியைத் தொடர்வோம்:—

சிவவாக்கியார், பஞ்சாக்கர மகிமையைக் கூறுங்காலை,

அகர காரணத்துளே அநேகநேக ரூபமாய்
உகர காரணத்துளே யுருத்தரித்து நின்றவன்
மகர காரணத்துளே மயங்குகின்ற வையகம்
சிகர காரணத்துளே தெளிந்ததே சிவாயமே"

என்றார். எழுத்துக்களில் முதலெழுத்தாய் நாம் கருதும்அகரம் (அதன் உருவம்) மற்ற எழுத்துக்களின் உருவத்திற்குத் தன் அங்கங்களின் பாகங்களையே பயன்படுத்துவதால், அந்த அகரம் காரணவெழுத்து அல்லது முளையெழுத்து என்று எண்ணப்படும். இவ்வாறு எண்ணுவதென்பது தமிழெழுத்துக்களின் தற்கால உருவங்களைப்பற்றியன்று. பல்லவன் காலத்தில் இறந்துபோக ஆரம்பித்திட்ட கல்வெட்டுகளில் காணப்படும் "வட்டெழுத்து", அல்லது "வெட்டெழுத்துக்"களில் உருவங்களைப் பற்றியேயாம். அவைகளே தொல்காப்பியம் முதலிய பழைய இலக்கணச் சூத்திரங்களிலுள்ள விதிகளால் காட்டப்பட்டன. அகரமானது பிரணவவடிவமான ஓகரத்தின் மாறுபட்ட அங்கங்களின் சையோக மென்றோம். ஓகரமும் எகரமும் பண்டைத்தமிழில் மெய்யெழுத்துக்களைப்போல் தலையில் புள்ளிபெற்று விளங்கு மென்பர். மெய்யெழுத்துக்களின் சுபாவம் தலையில் புள்ளிபெற்று நிற்றலாம். "மெய்யி னியல்பு புள்ளியொடு நிலையல்" (தொல்காப்பியம்) "எகர ஒகரத் தியற்கையு மற்றே" "உட்பெறு புள்ளி யுருவா கும்மே" (ஷெ) என்னும் விதிகளை நோக்குக.

தமிழ் எழுத்தின் உருவம் ஏன் இவ்வாறிருக்கின்றதென்பது நன்னூல் எழுதிய பவணந்திக்கும் விளங்க வில்லை. அவர்,

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர மொகர்மெய் புள்ளி" என்றார்

(நன்னூல் - எழுத்தியல் - 68)

"புள்ளி" யென்பது தற்காலத்தில் மெய்யின் தலையில் வைக்கப்படும் வட்டப்புள்ளி யன்று. ஆச்சரியக்குறி போன்று (!) கீழேயுள்ள வட்டமான அந்தச் சிறிய புள்ளி நீங்கலாய் மேல்பாகமான இலிங்க வடிவாம். இது மெய்யெழுத்தின் தலையிலும், எகர, ஒகரமான இரண்டு உயிர்களின் தலையிலும் பண்டைத் தமிழில் காணப்படும். இதன் காரணம் யாதென ஆராய்வதற்குத் திருநாவுக்கரசு நாயனார் பாசுரம் ஒன்று இரட்டுறமொழியும் தன்மையிற் சிறிது உதவுகின்றது:—

மெய்ய னைவிடை யூர்தியை வெண்மழுக்
கைய னைக்கட னாகைக்கா ரோணனை
மைய னுக்கிய கண்டனை வானவ
ரைய னைத்தொழு வார்கல்ல லில்லையே

திருநாகைக்காரோணம் - திருக்குறுந் தொகை 5.

இப்பாசுரத்தில் "மெய்யனை விடையூர்தியை" என்னும் தொடர்மொழியை "மெய்யனை, விடையூர்தியை" என்றும், "மெய் யனை(ய) விடை யூர்தியை" என்றும் இருவகையில் பிரித்துப் பொருள் கூறலாமன்றோ? இரண்டாவது வகை, அதனை, பசுபதியென்னும் கருத்தமைந்த தமிழின் எழுத்தியல் விளக்கும் தொடர்மொழியாக்கும். "விடையன்" என்பது சிவபெருமானைத் தேவாரத்தில் அழைக்கின்ற ஒரு செல்வாக்கான பெயராகும்.

விடையும் விடைப்பெரும் பாகாவென்
விண்ணப்பம் வெம்மழுவாட்
படையும் படையாய் நிரைத்தபல்
பூதமும் பாய்புலித்தோல்
உடையும் முடைதலை மாலையும்
மாலைப் பிறையொதுங்கும்
சடையு மிருக்குஞ் சரக்கறை
யோவென் தனிநெஞ்சமே.

சரக்கறைத் திருவிருத்தம் 1.

சிவபெருமான் விடையூர்வது ஒருவகை உருவகமாகும். நமது மெய்யில் சிவபெருமான் தங்கி அதை யாட்டுவிப்பதுஅதன் கருத்து.மெய்யெழுத்துக்களின் தலையில் புள்ளியானது இலிங்கவடிவமாய்த் திகழ்கின்றது. அப்புள்ளிக்கும் மெய்யின் உடலுக்கும் தொடர்ச்சி யில்லையாயினும், அப் புள்ளியின்றேல், மெய்யென்பது இயங்காது. அவ்வாறே, சிவபெருமானை விட்டு விடைதனியே காணப்பெறாதென்பதும், அவ்

வாறு காணப்பெறின், அது சிவநந்தி யாகாது என்பதும், விடையைவிட்டுச் சிவபெருமான் தன்னந் தனியாளுய் நிற்கும் தத்துவம் உண்டென்பதும் விளங்குவதுபோல், மெய்யெழுத்துக்கள் சிவபெருமான் குஞ்சிதபாதம்போன்ற புள்ளித்தலை பெற்றுநமது மொழியின் அணுக்கள் ஆகின்றன. உடம்பு தொலைந்த பசுவானது அதன் மீது நடனம்விளைவிக்கும் திருப்பாதத்தில் லயமாய்த் துன்பம் நீங்கி இன்பத்தில் ஆழுமென்பது ஆன்றோர் துணிவு:—

உடம்பைத் தொலைவித் துன்பாதந்
தலைவைத்த வுத்தமர்கள்
இடும்பைப் படாம லிரங்குகண்
டாயிரு ளோடச்செந்தீ
யடும்பொத் தனைய வழல்மழு
வாவழ லேயுமிழும்
படம்பொத் தாவரை யாயெம்மை
யாளும் பசுபதியே''

பசுபதி - திருவிருத்தம் 2.

மெய்யை சிவபெருமானுக்கு விடையாக்க வேண்டிய கருத்தாலே "இடபம் பொறித்தென்னை யேன்று கொள்ளாய்" என்று திருத்தூங்கானைமாடத்தில் திருநாவுக்கரசர் வேண்டினரென்பது வெளிப்படை

ஆகையால் தமிழ் மெய்யெழுத்துக்களின்மேல் புள்ளி நிலைத்தல், எல்லாச்சீவர்களுக்கும் ஆதாரவான சிவன், மெய்யுளே விளக்குப்போல "வேண்டளவுயரத் தூண்டி, யுய்வதோ ருபாயம்" பற்ற அறிகுறியாயிருக்கின்றது.

"எண்ணு மெழுத்தும், குறியுமறிபவர் தாமொழியப்
பண்ணினிசைமொழி பாடியவானவர் தாம்பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும்பிரான் திருவேதிகுடி
நண்ணவரிய வமுதினை நாமடைந் தாடுதுமே''

ஊர்ந்த விடையுகந் தேறிய
செல்வனை நாமறியோம்!
ஆர்ந்த மடமொழி மங்கைபோர்
பாக மகிழ்ந்துடையான்
சேர்ந்த புனற்சடைச் செல்வப்
பிரான் திருவேதிகுடிச்
சார்ந்த வயலணி தண்ணமு
தையடைந் தாடுதுமே.

திருவேதிகுடி - திருவிருத்தம் 6, 7.

# கலித்தொகை

[26-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக்கலி - 2.

தலைமகன் தான் பொருள் தேடுதற்காகத் தலைவியைப் பிரியப்போவதாகத் தோழிக்குக் கூறினன். தோழி அச்செய்தியைத் தலைவிக்குக் கூற, அவள் பெரிதும் துன்பத்தில் ஆழ்ந்தாள். இதனைக் கண்ட தோழி, தலைமகனை யடைந்து, தலைவியின் துன்பத்தை எடுத்துக்கூறிப் பிரியாதிருக்கும்படி அவனைவேண்டிக் கொண்டாள். ஆயினும் அவன் அவளுடைய சொற்களைக் கேட்டும் பிரிவதிலேயே நோக்க முடையவனாய் இருந்தான். அதனால், தோழி மனம்நொந்து, "நீர் போகும் காடே நும்மைப் போகவிடாமல் தடுக்கும்" என்று சொல்லி, அவன் பிரயாணத்தை நிறுத்த முயன்றதைக் கூறுவது இச்செய்யுள்:

அறனின்றி யயறாற்று மம்பலை நாணியும்
வறனீந்தி நீசெல்லு நீளிடை நினைப்பவு
மிறைநில்லா வளையோட விதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு புல்லென்ற நுதலிவள்
விறனல னிழப்பவும் வினைவேட்டாய் கேளினி!

உடையிவ ளுயிர்வாழா ணீநீப்பி னெனப்பல
விடைகொண்டியா மிரப்பவு மெமகொள்ளா யாயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன!

வல்லைநீ துறப்பாயேல் வகைவாடு மிவளென
வொல்லாங்கியா மிரப்பவு முணர்ந்தீயா யாயினை,
செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன!

பிணிபுநீ விடல்சூழிற் பிறழ்தரு மிவளெனப்
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வா யாயினை,
துணிபுநீ செலக்கண்ட வாற்றிடை யம்மரத்
தணிசெல வாடிய வந்தளிர் தகைப்பன!

எனவாங்கு,

யாநிற் கூறவு மெமகொள்ளா யாயினை
யானு திவள்போ லருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போ னீசெல்லுங்
கானந் தகைப்ப செலவு.

(தரவு)

(வரி. 1-5) அறன் இன்றி - தருமசிந்தை இன்றி, அயல் தூற்றும் - அண்டையிலுள்ள பெண்கள் பரப்பும், அம்பலை நாணியும் - பழிச்சொல்லுக்கு வெட்கப்படுதலாலும், வறல் நீந்தி - வறண்ட நிலத்தைக் கடந்து, நீ செல்லும் நீள் இடை நினைப்பவும் - நீ போகும் நீண்ட வழியை நினைப்பதாலும், இறை நில்லா வளை ஓட - முன்கையில் நில்லாமல் வளை கழல, இதழ் சோர்பு பனி மல்க-(கண்ணீர்) இமையினின்று முன்னர்ப் பெருகி வீழ்ந்து பின்னர் இமை நிறையும்படி நிற்க, பொறை நில்லா நோயொடு - பொறுக்கும் அளவில் நில்லாத காமநோயாலே, புல் என்ற நுதலிவள் - பொலிவழிந்த நெற்றியையுடைய இவள், விறல் நலம் இழப்பவும் - தனது வெற்றியையுடைய நலத்தை இழக்கவும், வினை வேட்டாய் - போர்க்குச் செல்ல விரும்பினவனே, இனி கேளள் - இப்பொழுது (யான் கூறுவதொன்றைக்) கேள்.

அறன் (அறம்) மகரத்திற்கு னகரம் போலியாக வந்தது.

(தாழிசை)

(வரி. 6-9) உடை இவள் - (நின்னை உயிராக) உடைய இவள், நீ நீப்பின் உயிர் வாழாள் என - நீ பிரிவாயானால் உயிரோடு இருக்கமாட்டாள் என்று, பல விடைகொண்டு யாம் இரப்பவும்-பலவற்றைக் கூறி யாம் வேண்டிக்கொள்ளவும், எம் கொள்ளாய் ஆயினை - எம்முடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனுனாய். கடைஇய ஆற்றிடை - (ஆனால் நீ நின் நெஞ்சைச்) செலுத்திய வழியிலே, நீர் நீத்த வறுஞ்சுனை - நீரில்லாத பாழ்பட்ட சுனைகளிலே யுள்ள, அடையொடு வாடிய அணி மலர் - இலைகளோடு வாடிய அழகிய மலர்கள், தகைப்பன-நின்னைப்போகவிடாமல் தடுப்பன ஆகும்.

(வரி. 10-13) வல்லே நீ துறப்பாயேல் - விரைவிலே நீ நீங்குவாயானால், இவள் வளை வாடும் என - இவளது உறுப்புக்கள் கெடுமென்று, ஒல்லாங்கு யாம் இரப்பவும் - (நினக்குப்) பொருந்தும் வழியிலே யாங்கள் வேண்டிக் கொள்ளவும், உணர்ந்தீயாய் ஆயினை - (இவள் வருத்தத்தை) அறியாதவனாய், (செல்லும் நீள் ஆற்றிடை - (ஆனால்) நீ போகும்நீண்ட வழியில், சேர்ந்து எழுந்த மரம் வாட - தாம் சேர்ந்து படர்ந்த மரம் வாடியதால், புல்லுவிட்டு இறைஞ்சிய - அதனைப் பற்றுதலைக் கைவிட்டுச் சிதறிய, பூ கொடி-மலர்க் கொடிகள், தகைப்பன-நின்னைப் போகவிடாமல் தடுப்பனவாகும்.

மரத்தைத் தலைவியாகவும் கொடியைச் சுற்றமாகவும் கூறினர்.

(வரி. 14-17) பிணிபு - சேர்ந்து இவளோடு இருத்தலை, நீ விடல் சூழின்-கைவிட நீ கருதுவாயானால், பிறழ்தரும் இவள் என - இறந்துவிடுவாள் இவள் என்று, பணிபு வந்து இரப்பவும் - தாழ்ந்து வந்து (யாங்கள்) வேண்டிக் கொள்ளவும், பல சூழ்வாய் ஆயினை - போருக்குச் செலப் பலவற்றையும்எண்ணுகின்றவனாய், நீ துணிபுசெலக் கண்ட ஆற்றிடை - நீ போதற்கு மனத்தால் நிச்சயித்துக் கண்டு வைத்திருக்கும் வழியில், அமரத்து அணிசெல வாடிய அம் தளிர்-முற்கூறிய மரத்தின் அழகு போகும்படி வாடிக்கிடக்கும் அழகிய தளிர்கள், தகைப்பன-நின்னைப் போகவிடாமல் தடுப்பனவாகும்.

(தனிச்சொல்)

(வரி. 18) என - என்று

ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 19-22) யாம் நின் கூறவும் - யாங்கள் நினக்குப் பலவற்றைச் சொல்லவும், எமகொள்ளாய் ஆயினை-எம்முடைய வார்த்தைகளை மனத்தில் கொள்ளாதவனாய், ஆனாது இவள்போல் அருள் வந்தவை காட்டி - (இனி) இடைவிடாது இவளைப் போலக் கண்டார்க்கு அருள்வருதற்குக் காரணமானவற்றைக் காட்டி, மேல் நின்று மெய் கூறும் கேளிர் போல - உனக்கு மேலாய் நின்று உண்மைகளைக் கூறும் உறவினர்போல, நீ செல்லும் கானம் செலவு தகைப்ப - நீ போகின்ற காடுகள் உனது செல்கையைத் தடுப்பனவாகும்.

தோழிக்கு அச்சமும் தலைவனுக்கு இழிவும் பிறந்தன.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[27-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து, 4-ம் தசகம்.

8-ம் பாசுரம்.

திருவுடை மன்னரைக் காணிற்
திருமாலைக் கண்டேனே யென்னு
முருவுடை வண்ணங்கள் காணி
லுலகளந் தானென்று துள்ளும்
கருவுடைத் தேவில்க ளெல்லாங்
கடல்வண்ணன் கோயிலே யென்னும்
வெருவிலும் வீழ்விலு மோவாள்
கண்ணன் கழல்கள் விரும்புமே.

இவ்வுலகத்தில்,செல்வர்கள் தங்கள் ஐசுவரியத்தின் அறிகுறிகளாகிய பிருதுக்களுடன் சென்றால் எல்லா வைபவங்களும் திருமாலுக்கே உளவாகையால் திருமாலைக் கண்டேன் என்று சொல்வாள். ரூபமெடுத்த காயாமலர்கள் தாமரை மலர்கள் குவளைகள் போன்ற வர்ணங்களுடைய பூக்களைக்கண்டால் திருமேனியின் அவயவ ஒற்றுமையாலேஉலகளந்தான் வந்துவிட்டானென்று துள்ளுவாள்.யாதானும் ஒரு ("கரு") பிரதிமையை உள்ளேயுடையதேவதாகோயிலைக் கண்டால் சமுத்திரம்போல் அதிசீதளமான மனோஹர திவ்விய நிறத்தையுடைய எம்பெருமான் கோவிலென்று ஊகித்து அங்கு உள்புகுவாள்.புகுந்தவாறே ஸ்ரீ கிருஷ்ண பிரதிமையைக் காணுமிடில் அஞ்சுவாள்.அப்படி அஞ்சிக் கீழே விழுந்தபோதிலுங்கூட ஓயாமல் கண்ணன் கழல்களைச் சிந்தித்து அவற்றையே ஆசைப்படுவாள்.

9-ம் பாசுரம்.

விரும்பிய பகவரைக் காணில்
வியலிட முண்டானே யென்னும்
கரும்பெரு மேகங்கள் காணில்
கண்ணனென் றேறப் பறக்கும்
பெரும்புல வானிரை காணில்
பிரானுள னென்று பின்செல்லு
மரும்பெறற் பெண்ணினை மாயோ
னலற்றி யயர்ப்பிக் கின்றானே.

உரை:-உள்கலந்த பக்தர்களான சந்நியாஸிகளைக் காணில் விசாலமான உலகங்களையெல்லாம் யுகப்பிரளயத்தில் திருவயிற்றில் வைத்து ஆதரித்த மஹாவிஷ்ணுவென்றுசொல்லுவாள் நீருண்ட மேகங்களைக் கண்டால் கண்ணனென்று மேலேஎழும்பித் துள்ளுவாள்.பசுமந்தைகளைக் கண்டால்அங்கே கிருஷ்ணனிருப்பானென்று ஊகிப்பாள். அருந்தவமியற்றி நான் பெற்றபெண்ணை மாயோன் துயர்படுத்தி மோஹிப்பிக்கின்றான், என்கிறாள்.

10-ம் பாசுரம்.

அயர்க்கும் சுற்றம் பற்றி
யகலவே நீணோக்குக் கொள்ளும்
வியர்க்கும் மழைக்கண் டுளும்ப
வெவ்வுயிர்க் கொள்ளும் மெய்சோரும்
பெயர்த்துங் கண்ணாவென்று பேசும்
பெருமானே வாவென்று கூவும்
மயல்பெருங் காதலென் பேதைக்
கென்செய்கேன் வல்வினை யேனே.

விரகவியஸந மிகுதியாலே அறிவழிந்து கிடக்கும் பின்னையும் நெடும்போதுகூட, உணர்ச்சி வந்தபின்னர், தன்னருகே கண்ணன் வந்தானாகக் கருதிச் சுற்றிலும் பற்றிநோக்கும்.அருகில் அவனைக் காணாதவாறே தூரத்தில் அகன்று போனானோவென்று நீணோக்குக் கொள்ளும். தூரத்திலும் காணாதொழிந்தவாறே நீராயுருகும். மழைக்கண் துளும்ப வெவ்வுயிர்க்கும். மெய்சோரும். பின்னையும் "கண்ணா" வென்று பேசும்.

பெருமானே வாராயென்று கூப்பிட்டழைக்கும்.இப்படிக் காதல் மிகுதியாலே மையலேறின என் பெண் பேதைக்கு என் செய்கேன். நானே பாவி—"என்று அலற்றுகிறாள்"—ஆறுயிரப்படி

---

11-ம் பாசுரம்.

வல்வினை தீர்க்குங் கண்ணனை
வண்குரு கூர்ச்சட கோபன்
சொல்வினையாற் சொன்னபாட
லாயிரத் துள்ளிவை பத்தும்
நல்வினை யென்று கற்பார்
நலனுடை வைகுந்த நண்ணித்
தொல்வினை தீர வெல்லாருந்
தொழுதெழ வீற்றிருப் பாரே.

உரை:—ஆச்ரிதருக்குச் சுலபனாயிருந்து அவர்களுடைய துக்கங்களையெல்லாம் தீர்த்துவைக்கும் கண்ணனைப் பாட்டாக பாடிய இந்த ஆயிரம் பாட்டில் இந்தப் பத்துப் பாசுரங்களைச் சுவயம் ப்ரயோஜநமாகக் கற்பவர்கள் வைகுந்தமேறி அநேக நித்திய ஸூரிகளாலே நன்கு மதிக்கப்பட்டு மீட்சியின்றி அந்தப் பரமபதத்திலேயே நித்தியவாஸம் செய்வார்கள்.

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

[33-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 1. களம் 2.

இடம்:—ஓர் தீவில், ப்ராஸ்ப்பீரோவின் குகைக்கு எதிரிடம். ப்ராஸ்பீரோவும் மிராண்டாவும் வருகின்றனர்.

மிராண்டா:—நின்னுடைய விஞ்சையால், வெஞ்சினத்திவ் வெள்ளத்தை இங்ஙனே கனைத்திட வைத்தனையாயின், என்னருந் தந்தாய், தணித்திடுக. (1)செடியுடைக் கிலினை யுருக்கிக் கொட்டுமாபோல் வானம் தோன்றினும், கடலோ விசும்பின் கதுப்பளவு இவர்ந்து அத் தீயினை அணைத்துவிடுகின்றது (2). ஐயகோ, துன்புற யான் கண்டவர்களோடு நானுந் துன்புற்றேன்! ஓர் அண்ணல்நாவாய்—பெருமை சான்ற பிராணிகள் சில அதனுள் இருத்தல் வேண்டும்—எல்லாம் துண்டுதுண்டா யுடைந்துபோயிற்றே (3). ஐயோ, அந்தக் கதறல் வந்தென் இதயத்தையே இடித்தது (4)! பாவம் அவ்வேழைகள் அழிந்தனர். மற்று, நான்தா னோர் ஆற்றலுடைத் தெய்வமா யிருந்தேனாயின், தான் சுமந்த சீவன்கள் உள்ளிருக்க நல்ல இக் கப்பலை இன்னணம் விழுங்காமுன்னம், இவ்வாழியை யான் பூமிக்குள்ளே ஆழ்த்தியிருப்பேன். (5)

ப்ராஸ்ப்பீரோ:—சாந்தமா யிரு.இனி யொன்றுந் திகைக்க வேண்டா. தீங்கொன்றும் புரியப் பெறவில்லை யென்று உன் பரிவுடை இதயத்திற்குச் சொல்.

மிராண்டா:—ஐயோ! துயர்கூர் நாளே! (5).

ப்ராஸ்ப்பீரோ:—தீங்கொன்று மில்லை. நின்பொருட்டல்லால் யான் ஒன்றுஞ் செய்திலேன். நின்பொருட்டே, என்னொரு அருமையோய், நின்பொருட்டே, என் புதல்வி (6), நீ யாவள் என்பதனை அறியாய். நான் எங்கிருந்தேன் என்பதறியாய். நிறைந்தவோர் வறிய இக் குகைக்குத் தலைவனும் நின் தந்தையுமாய ப்ராஸ்பீரோவே யன்றி அதனினும் அதிகம் நான் ஆவேனென்பது ஒன்றும் நீ யறிந்திலை. (7).

மிராண்டா:—அதிகம் அறியவேண்டுமென்று எனதெண்ணம் ஒருபொழுதும் உழன்றதில்லை.

ப்ராஸ்ப்பீரோ:—மேலினி உனக்குயான் சொல்லவேண்டியவேளை வந்துளது. உன் கைகொடுத்து என் மந்திரமேலங்கியை என்னின்றுகழற்றிவை (8). நன்று

ப்ராஸ்ப்பீரோ-மிலான் என்னும் இடத்துச் சிற்றரசனாக இருந்தவன். பன்னிரண்டு வருடங்களுக்கு முன் அவன் தம்பி அன்ட்டோனியோ, நேப்ல்ஸ் அரசனாகிய அலான்ஸோவின் உதவியால் ப்ராஸ்ப்பீரோவின் பதவியைக் கவர்ந்துகொண்டு அவனையும் அவன் பெண் மிராண்டாவையும் அகற்றிவிட, அவ்விருவரும் இப்பொழுது மனிதரற்ற இந்தத் தீவில் தனியாக வசித்துவருகின்றனர்.

(1) ப்ராஸ்ப்பீரோ, இந்திரஜாலங்கள் வல்லவனாதலின், அவனே இக் காற்றுமழையை எழுப்பியிருப்பான் எனத் துணிந்து மிராண்டா இதனைக் கூறுகின்றாள்.

விஞ்சை - மந்திரம், வெள்ளம்-கடல், உரறல்-பேரொலி செய்தல்.

(2) செடி - துர்நாற்றம். கீல் - துர் நாற்றம் மிகுந்த கரிய வொருபொருள் (Pitch or tar). இருண்ட மேகம் அடைந்திருக்கும் தோற்றம், கீலை உருக்கி உலகத்திற் கொட்டுவதற்கு ஆகாயம் எத்தனிப்பதுபோல் இருக்கின்றது. ஆனாலும், கொந்தளிக்கும் அலைகளையுடைய கடலோ ஆகாயத்தளவு உயர்ந்து கீலை உருக்குவதற்கு மூட்டிய நெருப்பை அணைத்துவிடுவதுபோல் தோன்றுகின்றது. கதுப்பு - கன்னம், இவர்தல் - உயர்ந்து ஏறுதல்.

(3) அண்ணல் நாவாய் - சிறந்த கப்பல்.

(4) கதறல் - கப்பல் உடைந்து முழுகினவர் கதறிய கதறல்.

(5) எனக்குத் தெய்வசக்தியிருக்குமானால், இந்தக் கடலை நான் பூமிக்குள் புதைத்திருப்பேன் என்கிறாள்.

(5) மிராண்டா, கப்பல் உடைந்ததைக் கருதிப் பின்னும் வருந்துகின்றாள்.

(6) கப்பலில் உள்ளவர்களுக்கு ஒரு தீங்கும் நேரவில்லை என்று உறுதிகூறி, இக் காற்றுமழையைத் தன் மந்திரத்தால் எழுப்பியது, மிராண்டாவின் நன்மையின்பொருட்டே என்பதைக் கூறவருகின்றான்.

(7) "இந்தக் குகையில் வசித்திருக்கும் உன் தந்தையாவதன்றி எனைப்பற்றி உனக்கு வேறொன்றும் தெரியாது"—என்பது பொருள்.

என் விஞ்சையே அங்கே, கிட (9)—நின் கண்களைத் துடைத்துக்கொள். கவலை யொழித்திடு. கருணையுடைய நின் குணத்தைத் தீண்டிய இவ்வங்கம் உடைதருமொரு கோரக்காட்சியை நான் என் மந்திரத் திறமையால், நீ கதறக்கேட்டு மூழ்கக்கண்ட அம் மரக்கலத்தின்கண் உள்ள எந்தப் பிராணிக்கும், ஒரு உரோமத்திற்குக்கூட, கேடுநேராமல் காத்து நிகழ்த்தியிருக்கின்றேன். மேலினி நீ தெரிந்துகொள்ளவேண்டும். உட்கார் (10).

மிராண்டா:—யான் யாரென்பதைச் சொல்லப் பன்முறை முன்னர் நீ துவக்கியதுண்டாயினும், அதனை நிறுத்தி, வீணே என்னை வினவ விட்டு இறுதியில், "இரு, இரு, இதற்குள் இல்லை" என்று முடித்திருக்கின்றனை. (11)

ப்ராஸ்ப்பீரோ:—இப்பொழுது எய்திவிட்டது அந்தக் கடிகை. உன் காதுகளைத் திறந்துகொள்ளும்படி இந்த நிமிடமே கட்டளையிடுகின்றது. (12) அதற்கிணங்கி உற்றுக்கேள். இந்தக் குகைக்கு நாம் வருவதற்கு முந்தியதோர் காலத்தை நீ நினைவுசெய்துகொள்வதற் கியலுமோ? உன்னா லியலுமென்று நான் எண்ணவில்லை. அப்பொழுது நீ முற்றிலும் மூன்றாண்டு முதிர்ந்தவ ளல்லையே.

மிராண்டா:—நிச்சயம், ஐய, என்னா லியலும்.

ப்ராஸ்ப்பீரோ:—எதனால்? வேறெம் மனையினால்? எம் மனிதரால்? (13) நின் நினைவிற்றங்கிய ஏதாவதொன்றன் உருவத்தைச் சொல் பார்ப்போம்.

மிராண்டா:—என்நினைவு தெரிவிப்பது, நிச்சயமாவதனினும் ஒரு கனவேபோல் நெடுந்தூரத்திற் கப்பாலுளது (14). என்னைவளர்ப்பதற்கு ஒருகாலத்தில் நாலைந்து மாதர்கள் இருந்தன ரல்லரோ? (15)

(8) ஜாலங்கள் செய்யும்போது மந்திரவாதிகள் ஓர் மேலங்கி அணிந்துகொள்வதுண்டு, அதனை இப்பொழுது கழற்றிவிடுகின்றான்.

(9) விஞ்சைகள் செய்வதற்குக் கருவியாயிருந்ததால், மேலங்கியை 'விஞ்சையே' என்று அழைக்கின்றான்.

(10) கப்பல் உடைந்து முழுகியதுபோல் தோன்றினும் ஒருவருக்கும் சிறிதுந் தீங்கில்லாமலே தன் மந்திரத்தால் காத்திருக்கின்றான் என்பதைத் தெரிவித்துப்ராஸ்ப்பீரோ தன் பழைய சரித்தை மிரண்டாவிற்குச் சொல்ல ஆரம்பிக்கின்றான்.

(11) இதன்முன் பலமுறை, இச் சரித்தை மிராண்டாவிற்குச் சொல்ல ஆரம்பிப்பதும் பிறகு இதற்குள்சொல்ல வேண்டாவென்று நிறுத்திவிடுவதுமாக ப்ராஸ்ப்பீரோ செய்திருக்கின்றான் என்பதை மிராண்டா தன் தந்தைக்கு நினைவுபடுத்தி, "அப்படித்தானே இப்பொழுதும்முடியப்போகின்றது" என்று அயிர்ப்பவள்போல் இதனைச்சொல்கின்றாள்.

(12) கடிகை - வேளை, சொல்லித் தீரவேண்டியகாலம் இப்பொழுது வந்துவிட்டது—என்பது பொருள்.

(13) உனக்கு நினைவு இருக்கின்றதென்றால், இந்தக் குகையைத் தவிர வேறு ஏதேனும் வீடோ, என்னைத் தவிர எவரேனும் மனிதரோ, இப்பொழுது நீ நினைத்துக் கூறமுடியுமா, என்று ப்ராஸ்ப்பீரோ கேட்கின்றான்.

(14) நினைத்துப்பார்த்தால், நெடுந்தூரத்திற்கு அப்பாலுள்ள செய்தி ஒரு கனவுபோல் தோன்றுகின்றதேயன்றி நிச்சயம் என்று எண்ணுவதற்கில்லை—என்பது பொருள்.

(15) தன்னை வளர்த்த செவிலியர் நாலைந்துபேர் தன் நினைவில் இருப்பதாக மிராண்டா கூறுகின்றாள்.

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[30-வது பக்கத் தொடர்ச்சி]

90 அயிலிரும்பு முண்டலுங் கூர்மையும் வேலும்.

91 அயிராணி யுமையு மிந்திரன் றேவியும்.

92 அயிரி மீன்முள் ளரிந்திடு கருவியும்
நுண்மண லுமென நுவல லாகும்.

93 அரண்மதிலும் வேலுங் கவசமுங் காவலுஞ்
செருப்புங் காடு மஞ்சலு மாகும்.

94 அருளே சத்தியுங் கருணையு மாகும்.

95 அரக்குச் சிவப்பும் மெழுகுங் கள்ளும்.

96 அரில்சிறு தூறுங் குற்றமுங் குழலும்
பிணக்கமுங் குரலும் பரலும் வயிரமும்.

97 அரவநூ புரமும் பாம்பு மோசையும்
ஆயிலிய முஞ்சிலை நாணு மாகும்.

98 அரசு பூமியு மன்னரும் ராச்சியமும்
அரச மரமு மறைய லாகும்.

99 அரசர் வன்னியர் வேந்தரு மாகும்.

100 அரிதம் பூமியும் பச்சையுந் திக்கும்
பசும்புல் லுமெனப் பகர லாகும்.

101 அரலை கனியுங் கழலையும் வித்தும்
கடலுங் கற்றூழையுங் கழற லாகும்.

102 அரம்பை வாழையுந் தெய்வப் பெண்ணும்.

103 அரங்கோ ரில்லு [1]மிடமு மாகும்.

104 அராகம் பாலைப் பண்ணுஞ் சிவப்பும்
ஆசையு முடுகும் பாவு மாகும்.

105 அருண னுதித்தன்றேர்ப் பாகனும் புதனும்
ஆதித்த னுமென வறைய லாகும்.

106 அருகல் சாதலுஞ் சுருங்கலு மாகும்.

107 அருகர் சாவகரு நில்ல[ா]மையுமாம்.

108 அரத்தமுற் பலமும் பொன்னுஞ்செம் [2]பரத்தமும்
நீபமுஞ் சிவப்பும் பவளமு [3]மிரத்தமும்.

109 அரிட்டங் காக்கையுங் கள்ளும் வெற்பும்
பிரவியிற் குற்றமும் பேச லாகும்.

110 அரந்தை துன்பமுங் குறிஞ்சி யாழும்.

111 அரணி கோலுஞ் வேலியும் கவசமும்.

112 அருணஞ் சிவப்பு மானுமெலு மிச்சும்
ஆடு மெனவே யறைய லாகும்.

113 அரங்க மாற்றிடைக் குறையு மாடிட்டமும்
வட்டா டிடமும் போரிடமுஞ் சபையும்.

114 அருப்ப மூருங் காடு மரணும்
நந்து கோயுஞ் சோலையு மாகும்.

(பிரதி)—[1] மிபமு. [2] மத்தமும். [3] மிரத்தமு மாக்கும்.

115 அரசன் வியாழமும் வேந்தனு மாகும்.

116 அரற்ற லழுகையு மோசையு மாகும்.

117 அருச்சுன மருதும் வெண்மையும் [4]பொன்னும்.

118 [5]அருந்த லருமையு முண்டலு மாகும்.

119 அருத்தி யாசையுங் கள்ளு மாகும்.

120 அருக னருகனு நண்பனு மாகும்.

121 அரிவை பருவமு மாதரு மாகும்.

112 அருவிதினைத் தாளும் வெற்பு மாறும்.

123 அரணங்காவற் கானுங் காவலும் வேலியும்
மதிலு [6]மஞ்சலுங் கவசமுஞ் செருப்புமாம்.

124 அரையோ [7]ரெண்ணுமோ ருறுப்பு மாகும்.

125 அரியே தேரு மலையு மரித்தலும்
மூங்கிலும் வயிரமும் பறையும் பாம்பும்
அரிசியும் பன்றியு மரிதலும் புரையும்
கிளியும் நெற்கதிரும் படைக்கலமும் பொன்னும்
புகையுஞ் சோலையுங் காந்தியுங் கடலும்
கிண்கிணிப் பரலுந் தவளையு மாலையும்
கண்வரியும் புகருங் குலிசமும் வாயும்
இந்துவும் விசியுங் கள்ளுங் குதிரையும்
நன்னிறமும் வாளுங் குரங்கும் வலியும்
வண்டுந் திகிரியும் பகையும் அம்பும்
பாயலுங் காற்று மென்றாழுஞ் சயனமும்
இந்திர னுந்திரு மாலுஞ் சிங்கமும்
ஐமையுங் கூற்று மங்கியும் பச்சையும்
கூர்மையுஞ் சேகு மாடுஞ் சுடருமாம்.

126 அலியே தீயுஞ் சோறும் பேடனும்
மறலியு நறுவிலியுமென வழங்க லாகும்.

127 அலகுநெற் கதிரும் புள்வாயுந் துடைப்பமும்
பலகறையு மிலஞ்சிப் பாலுமோ ரெண்ணும்
[8]நுளம்பும் ஆயுதமுமென நுவல லாகும்.

128 அலரி தேனீயும் பூவுமோர் மரமும்
அழகுங் கண்வரியு மருக்கனும் வாவியும்
மலர்க்கணை யுமென வழுத்த லாகும்.

129 அலவனம் புலியும் பூனையு நண்டும்
கடக ராசியுங் கழற லாகும்.

130 அல்லிவெள் ளாம்பலுங் காயாவு மலியும்
பூந்தா துமக விதழும் புகலும்.

131 அல்க லிலம்பாடும் நாளுஞ் சுருங்கலும்
தங்கலு மிரவுஞ் சாற்ற லாகும்.

132 [9]அல்கு தங்கலுங் கங்குலு மாகும்.

133 அலைகடற் றிரையுங் கடலு மாகும்.

134 அலங்கல் பூமாலையுந் தளிரு [10]மசையும்
இலங்கலு மெனவே யியம்ப லாகும்.

135 அலர்விரி பூவும் புறங்கூறலும் பழியும்.

136 அல்லே யிராவு மிருளுமா தித்தனும்.

137 அவல்சிற் றுண்டியுந் தடாகமுங் கீழும்.

138 அவந்தியோ ரூரும் கிளியுஞ் சேனையும்.

139 அவனி பாரகரும் வேந்தரும் பூமியும்.

140 அவினயங் கூத்து நூலு மங்கமும்.

141 அவிர்த லொளியும் பீறலு மாகும்.

142 அவிதேவ ரூணு நெய்யு மாகும்.

(பிரதி)—[4] பந்துமாகும். [5] அருத்த. [6] மஞ்சமு. [7] ரெண்ணுமரையுறுப்பு [8] நுணபுமாயதமு. [9] அல்குதம்பமுங். [10] மாசையும்.

143 அழுவம் பரப்புந் துருக்கமு முரசும்
நடுக்கமு நாடு நவில லாகும்.

144 அழனந் தீயும் பிணமு மாகும்.

145 அழுங்க லேயுஞ் சோம்புங் கேடும்
ஓசையும் நடுக்கமுந் துன்பமு மேங்கலும்.

146 அழுக்காறு மனத்தின் கோட்டமும் பொறாமையும்.

147 அழகு சர்க்கரையும் வெல்லமு மழகும்.

148 அழுக்கே மாசு மாமையு மாகும்.

149 அளஞ்செறிவுங் கூர்மையு முப்பளமுங் கடலும்.

150 அளையே தயிரு முழையும் புற்றும்
பாழிலு மோரும் பகர லாகும்.

151 அள்ளல் சேறு நரகமு மள்ளலும்.

152 அளகங் கொந்தளமு மோதியு நீரும்.

153 அள்ளே கூர்மையுஞ் செறிவும் வன்மையும்
செவியும் வலியும் பற்றிரும்புஞ் செப்புவர்.

154 அளியன்பும் வண்டுங் கொடுத்தலு மதுவும்.

155 அளவை மரக்காலு நாழியுந் தினமும்
எல்லையு மெனவே யியம்ப லாகும்.

156 அளித்தல் காத்தலுங் கொடுத்தலுஞ் செறிதலும்.

157 அளக்கர் கார்த்திகையும் பூமியுஞ் சேறும்
கடலு முப்பளமுங் கழற லாகும்.

158 அளறு நரகமுஞ் சேறு மாகும்.

159 அறையே பாறையுஞ் சிற்றிலு மறைதலும்
அலையு மொழியு மலைமுழைஞ்சு மாகும்.

160 அற்ற மறைப்பொருளு மவகாசமுஞ் சோர்வும்
நாயுந் துடியுஞ் சற்றுமற் றதுவும்
உண்மையு முடிவு மோத லாகும்.

161 அறல் நீர்த் திரையு நீரும் விழாவும்
நுண்மண லுமென நுவல லாகும்.

162 அறுவை யாடையும் சித்திரை நாளும்.

163 அற்பஞ் சிறுமையு நாயு மாகும்.

164 அறுகு சிங்கமும் புலியும் யானையும்
அறுகம் புல்லும் யாளியு மாகும்.

165 அறுபதங் கையாந் தகரையும் வண்டும்.

166 அறிக்கை பற்றி வித்தலு மறிதலும்.

167 அன்னே விகுதியுஞ் சாரியையு மாகும்.

168 அன்றி வன்றிற் புள்ளு மூலமும்.

169 அன்னை தாயு மூத்தாளுந் தோழியும்.

170 அனலிபாற் காணுந் தீயு மாகும்.

171 அனந்தன் மாலு மருகனுஞ் சிவனும்
சேடனுந் தெய்வமும் செப்ப லாகும்.

172 அனந்தம் அளவின்மையும் பொன்னும் விண்ணும்.

173 அனந்தையோர் சத்தியும் பூமியு மாகும்.

174 அனங்க மிருவாட்சியு முல்லையு மாகும்.

175 அனிலம் பவமுங் காற்று மாகும்.

176 அன்னஞ் சோறு மன்னப் புள்ளும்.

177 [1]அனுக்கவுன் முகனுந் தொடர்ச்சியு மாகும்.

178 அனித்திய நில்லாமையுஞ் சந்தனமும் பொய்யும்.

179 அன்னியம் கோதுமலுங் குயிலு மாகும்.

180 [அ] அதிசயமுஞ் சுட்டு மாதியு முயிரும்
[2]துயரு மல்லவுஞ் சொல்ல லாகும்.

(பிரதி)—[1]. அனுக்கவுள. [2] துயிரு.

அகரவருக்க முற்றும்.

# யாப்பிலக்கணம்

[35-வது பக்கத் தொடர்ச்சி]

## அடி

முன்னிதழில் சீரானமைந்தஎழுவகைத் தளைகளைப் பற்றிக் கற்கவேண்டுவனவற்றைக் கற்றோம். இவ்விதழில் தளை பல அடுத்து நடக்கும் அடியைக் கற்போம்: [இதன் விரிவை, 4 வது வால்யூம், 14, 15-வது இதழ்களில் காணலாம்.]

சொற்றொடர்கள் உரைநடையில் அமையும்விதம் வேறு; செய்யுள் நடையில் அமையும் விதம் வேறு. ஆதலின், செய்யுட்களை ஒருவரையறைக்குட்படுத்தி, இவ்வகை நடப்பது இன்ன செய்யுளெனப் பெயர் வழங்கற்கு அடி வகுப்பு முறை இன்றியமையாததாம். அங்ஙனம் வகுக்கப்பட்ட அடிகள் ஐவகைப்படும். அவை குறள் அடி, சிந்து அடி, அளவு அடி அல்லது நேர் அடி, நெடில் அடி, கழி நெடில் அடி என்பனவாம்.

1. குறளடி:—இரண்டு சீர்களால் அமைந்த அடி குறளடி எனப்படும்.

உ - ம்:—அறம்பல நாட்டியவாம்
திறம்பெறு நூற்றொகைகள்
பிறங்கு தமிழ்மொழியே
மறங்களை மாய்த்திடும்வாள்.

[பலவகைப்பட்ட அறநெறிகளைச் சிக்கறுத்துநிலை நாட்டிக் கூறுவனவாகிய வலிமை பெற்ற நூலின் தொகைகளைக் கொண்டு விளங்குகின்ற தமிழ்மொழியே தமிழ் மக்கட்கு அறியாமையால் நேரும் பாவங்களைச் சிதைத்தொழிக்கத் தகுந்த வாளாகும் என்பது இச்செய்யுளின் பொருள்.]

2. சிந்தடி:—மூன்று சீர்களைக் கொண்டு நடப்பது சிந்தடி எனப்படும்.

உ - ம்:—துன்ற மொன்று குறைத்தவன்
அன்று சூர்முத லட்டவன்
என்று நிற்கு மெழிலினன்
இன்று நிற்குநம் மிதயமே.

3. அளவடி அல்லது நேரடி:—நான்கு சீர்களைப் பெற்று நடப்பது அளவடி அல்லது நேரடி எனப்படும்.

உ - ம்:—

"கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுடர். இருபுறத் தேந்தி யேடவிழ் [மேல்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினான்."

(இது கம்பராமாயணம் பால காண்டம் திருவவதாரப் படலத்திலுள்ள செய்யுள்.)

4. நெடிலடி:—ஐந்து சீர்கொண்டு நடப்பது நெடிலடி எனப்படும்.

உ - ம்:—

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே.
உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத்
இருண்ட கல்லையும் தந்நிற மாக்கிய இரதம்." [தோடி

(இது கம்பராமாயணம் பால காண்டம் வரைக் காட்சிப் படலத்திலுள்ள செய்யுள்.)

5. கழிநெடிலடி:—ஐந்து சீரின் மிகுந்து எனைத்துச் சீரானும் வருவது கழிநெடிலடி எனப்படும்.

(நெடிலடியின் மிகுந்த அடி என்பது இதன் பொருள்.)

குறிப்பு:—ஐந்து சீரின் மிக்க எனைத்துச் சீரானும் கழிநெடிலடி யமையுமெனினும், எண்சீர் வரை யமைதலே சிறப்புடைத்தாம்; எண்சீரின் மிக்க சீர்களைக் கொண்டு நடக்கும் அடி சிறப்புடைத்தன்று.

உ - ம்:—

(1) "இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா."

(இவ்விராமாயணச் செய்யுளி லடிதோறும் ஆறு சீர்கள் அமைந்துள்ளமை காண்க.)

(2) "மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமுநான் சகித்திட மாட்டேன்;
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தம் தவிர்க்கநல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்!"

(இத்திருவருட்பாச் செய்யுளி லடிதோறும் எழு சீர்கள் அமைந்துள்ளமை காண்க.)

(3) "கோடையிலே இளைப்பாற்றிக்
கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே!
நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத்தண் ணீரே!
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த
சுகந்தமண மலரே!
மேடையிலே வீசுகின்ற
மெல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே!
சுகத்திலுறும் பயனே!
ஆடையிலே எனைமணந்த
மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே! என்
அலங்கலணிந் தருளே."

(இத் திருவருட்பாச் செய்யுளில் அடிதோறும் எண்சீர்கள் அமைந்திருத்தல் காண்க.)

(4) "இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின்
எதிர்ந்த தாரையை இலங்கும்
ஆழியுறின் விலங்கியோன்
முடங்கு வாலுளை மடங்கல் மீமிசை
முனிந்து சென்றுடன் முரண்ட
ராசனை முருக்கியோன்
வடங்கொள் மென்முலை நுடங்கு நுண்ணிடை
மடந்தை சுந்தரி வளங்கொள்
பூண்முலை மகிழ்ந்தகோன்
தடங்கொள் தாமரை இடங்கொள் சேவடி
தலைக்கு வைப்பவர் தமக்கு
வெந்துயர் தவிர்க்குமே."

(இப்பழம்பாட்டில் அடிதோறும் ஒன்பது சீர்கள் அமைந்திருத்தலைக் காண்க.)

(5) "கோங்கு தங்கு கோதை ஓதி மாத ரோடு
கூடி நீடும் ஓடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத என்று நின்று தாழ
அங்க பூர்வம் ஆதி யாய ஆதி நூலின்
நீதி யோதும் ஆதி யாய
செங்கண் மாலைக் காலை மாலை சேர்நர் சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே."

(இப் பழம்பாட்டில் அடிதோறும் பத்துச் சீர்கள் அமைந்திருத்தல் காண்க.)

(6) "அருளாழி யொன்று மறனே ரிரண்டு
மவிர்சோதி மூன்றொ டணியோக நான்கு
பதமைந்து மாறு பொருண்மேல்
மருளாழி போழு நயமேழு மேவி
நலமெட்டும் வாட்டும் வகையொன்ப தென்றல்
வருதற்கோ பத்தின் மகிழா
இருளாழி மாய எறியாழி யன்ன
எழிலாழி தன்னு ளெழுஞாயி றோட
அவிர்கின்ற எல்லை யளவும்
உருளாழி செல்ல ஒழியானம் பக்கல்
உலவாத செல்வ முடனேயொ டொல்கி
உலகுச்சி சேர்வ துளதே."

(இப்பழம்பாட்டில் அடிதோறும் பதினொரு சீர்கள் அமைந்திருத்தல் காண்க.)

(7) "கோளறி வாளரி வல்லியம் ஒல்லொலி
கொண்ட கொலைத்தொழில் எண்கொடு கேழல்
கொட்கு நெடுஞ்சிமை உட்கிவர் மால்வரை
ஆளியை அஞ்சிய வெஞ்சின மால்களி
றந்தளிர் நந்திய சந்து மறைந்தகல்
அஞ்சுடர் வான்தவழ் மஞ்சு மணந்தெழும்
நீளர வல்குல் நிறங்கிளர் நுண்டுகில்
நித்திலம் வைத்து நிரைத்தபன் மாலைகொள்
நேரிழை மென்முலை போதெழில் நன்னுதல்
வாளரி சிந்தி அவிர்ந்து விலங்கின
மைதரு முண்கண் வணங்கு நுணங்கிடை
வண்டிமிர் வார்குழல் ஒண்டொடி மாதே."

(இப் பழம்பாட்டில் அடிதோறும் பன்னிரு சீர்கள் அமைந்திருத்தல் காண்க.)

(8) "நாடி மீடல் அல்ல தில்லை
நல்ல பூவின் அல்லி மேய
நம்பி போலு நம்பி தன்னோ டன்பளாய்
ஆடு மஞ்ஞை அன்ன சாயல்
அஞ்சொல் மாதர் பஞ்சி துஞ்சும்
அல்குல் நோவ மெல்ல ஒல்கி அல்லல்சேர்
வேடர் ஓடி வேழம் வீழ
வெய்ய அம்பின் எய்து சுட்ட
வேய்கொள் தீயின் வெந்து விண்டு வெம்மை [சேர்
கோடை யோடு நீடு வாடு
குன்றி னின்றும் இன்று சென்று
கோடி மாட கூட நாடு கூடமே."

(இப்பழம்பாட்டில் அடிதோறும் பதின்மூன்று சீர்கள் அமைந்திருத்தல் காண்க.)

(9) "கவிவாணர் வட்டத் தலைப்பாகை கட்டிநற்
கவியெழுதி ஏட்டின்மஞ்சள்
காப்புமிட் டவ்வூரி னிற்பரிசு பெறுமாறு
காணவரு செய்திகேட்டுக்
கைகால் நடுக்கமுற் றறிவுங் கலங்கியங்
கம்சலச மென்று வேர்த்தக்
கணத்தின்மனை யாட்டியைக் கூவி, "நீ கடிதினிற்
கதவுபூட் டித்தாழ் இடாய்.
அவதியிவ் வேளையினில் இந்தவிதம் வருமென்
றறிந்திருந் தால்நேற்றையே
அயலூர் புகுந்தவன் போனபின் வரலாகும்
அதையினிப் பேசுவதனால்
ஆவதிலை. சிறிதுபொறு! பேசாதை! வாயிலினில்
ஆரோவொ ராட்பேசினான்!
அவன்றா னடீவந்த பழிகாரன்!' எனமனம்
அழிந்துடன் மறந்துகுழறிச்
"செவ்வையாக நாற்காலி தனைமெத்தை மீதுவிரி;
திண்டையும் கால்மாட்டில்வை ;
சீக்கிரம் சோற்றின்மேல் இலைபோ டெனக்குமொரு
தெண்ணீரி லேசெம்புதா;
திடமாக இரு; மனம் பதறாதை; என்மோதி
ரம்காதில் எங்கு? காணேன்!
தேடு; சுண் ணக்கரண் டகமதனில் வெற்றிலை
செறிந்தபை கிடக்கிறதெடு;
தவறாத படிசென்று தொழுவைமாட் டுக்கால்
தனிற்கட்'' டெனப்பேச்சுமே
தடுமாறி மனைவியைத் தாயென்று தாய்தனைத்
தந்தையென மகனைமகளாய்த்
தாமுறைமை பிசகிப் பிதற்றுபிசி னர்க்கண்டு
சஞ்சலமு றாதுபாரில்
தனகனகம் ஆதிய நலம்சேர்த்தி முதலநனி
தந்துதவு வாய்கடவுளே."

(இச்செய்யுள் சேறை அனந்த நாராயண ஐயர் என்னும் புலவரால் இயற்றப்பட்டு, விநோதக் கடவுள் வாழ்த்து என்னும் பெயருடன், ஞானபோதினி என்ற நற்றமிழ் மாதாந்தப்பத்திரிகையின் நாலாஞ் சம்புடத்தில் நாலாம் புத்தகத்தில் (1900 ஆு நவம்பர் மீ 20உ) வெளியிடப்பட்டதாகும். இதில் அடிதோறும் இருபத்து நான்கு சீர்கள் அமைந்திருத்தல் காண்க.)

இவ்வாறே பல சீர்களான் அமைந்து வருஞ் செய்யுள் சில உள. தொல்காப்பியர் எழுத்தெண்ணி அடி வகுப்பர். அங்ஙனம் எழுத்தெண்ணுங்கால் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், ஒற்று இவற்றை ஒழித்து எண்ணுதல் வேண்டும். இனி அடிகளுக் கமைந்த பெயர்க்காரணத்தை, "அடிகளைக் காரணக் குறியான் வழங்குமாறியாதோவெனின், மக்களுள் தீரக் குறியானைக் குறளன் என்றும், அவனின் நெடியானைச் சிந்தன் என்றும், குறியனு நெடியனுமல்லாதானை அளவிற்பட்டான் என்றும், அவனின் நெடியானை நெடியான் என்றும், தீர நெடியானைக் கழிய நெடியான் என்றும் வழங்குவாராதலின், இவ்வடிகளுக்கு மிவ்வாறே பெயர் சென்றவெனக் கொள்க," என்னும் முன்னையோர் கூற்றுணர்க.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

# ஞானமொழி

ஆறு திருமுகங்களை யுடையவரே! பன்னிரண்டு திருக்கரங்களையுடையவரே! தண்டையணிந்த தாளா! வள்ளிகுஞ்சரி மணாளா! வேன்முருகா! மான்மருகா! நம்பிக்கையுள்ளவர்க்கு நம்பி! தும்பிகையுள்ளவர்க்குத்தம்பி! ஈசற்கு மகனே, என்று மிளைய குகனே! எம்பெருமானே, நீயே முழுமுதற் கடவுள்! ஐயமில்லை. அறிந்தேன். எங்ஙனமறிந்தேனெனின் அன்பிலாச் சூரனிட்ட புன்சிறையிற் கிடந்த ஆலமுண்ட கண்டனை நோக்கி அரற்றிய இந்திரன் மகன் சயந்தனுக்கு அருட்கடலே, கனவின்கண் அருளுருக் காட்டித் தோன்றி யருள்சுரந்த அருஞ்செயலா லறிந்தேன். ஆருயிர்க் குயிரும் ஐயா நீயே என்பது மறிந்தேன். பெரியோனே! ஆணவமலச்சூரனால் காயாபுரிக் கருஞ்சிறையிலிடப்பட்டு அடியேன் படுமின்ன லறிகின்றிலையோ. அறியாயெனின் எல்லாமறியு முனது பேரறிவுக் கிழுக்கு நேரும். அறிந்தும் அருளாயெனின் அந்தோ தேவரீரது வற்றாப்பெருங்கருணைக்குக் குற்றம்வரும். உன் பக்குவம் நோக்கியிருக்கின்றேன் என்பீராயின் பக்குவம் வருமுன் ஆணவச்சூரன் என்னைக்கொன்றுவிடுவானே, பின் ஆருக்கருள்வது. கந்தா கடம்பா "அடியவன் ஒருவனுக் கருள் தந்திலர்" என்னும் பழி தேவரீரைப் பற்றுமுன் எனக் கருளுக. முருகா உன் தஞ்சம்.

***

வீரவேலாயுதா,வெற்றிமயில்வாகனா,சூரசங்காரா. ஆணவமென்னும் பொல்லாத சூரன் காமன் முதலிய வீரருடன் என்னைக் கொல்ல வருகின்றான். மாயை மகன் சூரனிலும் இவன் வலியன். ஓடவும் மாட்டேன், ஒளிக்கவும் இடமில்லை முருகா! ஓலம்! ஓடிவந்து என்னை ஆண்டருள், நீயே துணை. ஓகோ! முருகா! நீ வருகின்றாய்! உன் திருவடித் தண்டையுஞ் சிலம்பும் ஒலிக்கின்றன கோழிக்கொடி கூவுகின்றது. மயிலின் நடனவொலி கேட்கின்றது. இளஞ்சூரியன் போல் ஓர் ஒளிப்பிழம்பு தோன்றுகின்றது. அதற்குள்ளே ஆறுமுகமும் புன்சிரிப்புங் காண்கின்றேன். நீ வந்துவிட்டாய் அப்பனே இனி அஞ்சமாட்டேன்.

***

முருகா. பெரியோனே நீ அறிவுக்கறிவு. நினைவுக்கு நினைவு. நான் ஒன்று நினைக்கினும் அந்நினைப்பை நீ அறிந்தபின்பே நானறிகின்றேன். ஆதலின் உயிருக்கு முயிர் நீயே.

***

ஐயா முருகா,அருட்கடலே,எல்லாவுலகுமாய்நின்ற நின் பெருவடிவில் ஆருயிர்த்தொகைக ளனைத்தும் உறுப்புக்களாக அமைந்திருக்கின்றன வென்பதை வேட்டுவமன்னன் வேனம்பியீந்த திருவமுதை உட்கொண்டோமென்று நீ கூறிய வளவிலே எல்லாவுயிர்களும் நிறைவெய்தியதனா லறிந்தேன். பெருமானே யானும் உன் வடிவத்திலோ ருறுப்பு; ஆதலின் யான் ஒன்றுக்கு மஞ்சேன்.

***

சன்னிநோயிற் பிடிக்கப்பட்டோன் அறிவு மயக்கத்தினாலே அந்நோயின் வருத்தத்தை அறியான். மயக்க மருந்து கொடுக்கப்பட்டோன் அறிவு மயக்கத்தினாலே வைத்தியன் வெட்டும் வருத்தத்தை அறியான். அதுபோல ஆணவமலத்தினாலே பிடிக்கப்பட்டோன் அறியாமையினால் அவ்வாணவமலஞ் செய்யுங்கெடுதிகளை அறியான். நோய் மருந்தினாற் றணிப்பட்டு அறிவு உண்டாகும்,பொழுதும் மயக்கமருந்தின் வலிகெட்டு அறிவு உண்டாகும்பொழுதும் வேதனையை அறிவதுபோல,அருளினா லறிவு விளங்கியபொழுது ஆணவமலத்தின் கெடுதிகளை அறிவான். அது உயிரையேயன்றி உடம்பையுங் கெடுக்கும் பொல்லா நோய்.

***

சிவசிவ முருகா! தெய்வசிகாமணியே, பச்சைமயில் வாகனா! வாரண முதல்வா! அரசே! அறிவருளறிவராகிய வீரவாகுதேவர், சூரன்மகன் பானுகோபனைக் கொன்று பின் வந்து உமது திருவடிகளை வணங்கிய பொழுது தேவரீர் அவரை அன்புடன் முகம்நோக்கி தம்பி, உனக்கு யாது வேண்டும் இயம்புதி என வினவியருளினீராக; வீரவாகுதேவர் அண்ணலே! எனக்குக் குபேரனுடைய செல்வமும்வேண்டாம், திருமாலின் பெரும்பதவியும் வேண்டாம். மலரயனின் சத்தியலோக வாழ்வும் வேண்டாம். ஐந்தரு நிழற்கீழரசு வீற்றிருக்கு மிந்திரபோகமும் வேண்டிலன். அண்ணலே! தேவரீருடைய திருவடிக்கண் மாறா வன்பொன்றையே தருதல்வேண்டும். அதுவே யான் விழைவது அது முத்தியினரியது என்று வேண்டினார். தேவரீர் முகமலர்ந் தீந்தருளினீர் அருட்டிரையே! அடியேன் ஆணவமலமென்னுஞ் சூரின் முதற் புத்திரனாகிய காமனைவென்று உமது திருவடிகளைச் சரணடையுங்காலை, குன்றெறிகுமர! நீர் என்னை நோக்கி 'உனக்கு என்னவேண்டும் என்று கேட்கும்பொழுது பிறிதொரு பொருளையு மிச்சியாது உன் திருவடிக் கன்பையே வேண்டிப்பெறும் நல்லெண்ணத்தைத் தந்தருளவேண்டும், பெரியோனே! உன் திருவருளால் எல்லாமாகும் அருளின்றேல் ஒன்றுமாவதில்லை.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

**டானிக்குகள் :**

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |

"சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு

**தைலங்கள் :**

| | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக ,, | 0-12-0 |
| பிருங்காமலக ,, | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராசா — I.D.L. பிருங்காமலக தைலம் — கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. ஸ்பெஷல், மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றாமணக்கு எண்ணெய் காஸ்டராலதீன்

ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி - ஆதார நூற்றொகுதி
### நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 1000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

### கம்பராமாயணம்—யுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

### திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட்குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணு 0-6-0

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**

## திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் வரைங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற்றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானாய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட 25 பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், க்வாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.

## ANCIENT JAFFNA

**MUDALIAR C. RASANAYAGAM c.c.s.**

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

KALANILAYAM
Purasawalkam, Madras.

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிகாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

**கலாநிலய இலவசத் தமிழ்க் கழகங்கள்:**—கம்பராமாயணம், மணிமேகலை, சிலப்பதிகாரம் அனைய தமிழ் நூற்களைத் தாமே படித்து இன்புறுவதற்கு வேண்டிய பயிற்சியை, பற்பல உத்தியோகங்களிலும் தொழில்களிலும் அமர்ந்திருப்பவர் எளிதில் 18 மாதகால அளவில் பெறும்படி செய்யும் முறையில் இக் கலாநிலயக் கழகங்களில் பாடம் போதிக்கப்படும். இதனில் எவ்வயதினரும் எவ்வுத்தியோகத்தினரும் சேரலாம். சம்பளம் ஒன்றும் இல்லை. வாரம் இருமுறை இக்கழகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் கூடும்.

1. பிரம்பூர் கலவல கண்ணன்செட்டியார் உயர்தரப் பாடசாலைக் கட்டிடத்தில் திங்கள் வியாழக் கிழமைகளில் 6-30 முதல் 7-15 வரையில் கூடி நடைபெற்று வருகின்றது.

2. பிரம்பூர் பாரெக்ஸ் கார்ன்பக் கிளப் கட்டிடத்தில் புதன் சனிக் கிழமைகளில் மாலை 7-15 முதல் 8 மணிவரையில் கூடி நடைபெற்று வருகின்றது.

3. வண்ணாரப்பேட்டை ராபின்ஸன் பார்க்கிற்கு அருகிலுள்ள முனுசாமிசெட்டியார் கார்டன் 3-வது சந்திலுள்ள தனலக்ஷ்மி பாடசாலையில் புதன்கிழமை மாலை 6-30 முதல் 7-15 வரையிலும், ஞாயிற்றுக் கிழமை காலை 8 முதல் 9 வரையிலும் கூடி நடைபெற்று வருகின்றது.

4. சென்னை எஸ்பிளனேட் கிரிஸ்டியன் காலேஜ் கட்டிடத்தில் ஜனவரி மாதம் 20-ந்தேதி வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி, பிறகு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மாலை 5-30 முதல் 6-15 மணிவரை நடைபெறும்.

5. இராயப்பேட்டை அம்மையப்பமுதலி தெருவிலுள்ள கார்ப்பொரேஷன் பள்ளிக் கட்டிடத்தில் ஜனவரி மாதம் 20-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 6-45 க்குக் கழகம் ஆரம்பமாகிப் பிறகு செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6-45 முதல் 7-30 வரை நடைபெறும்.

6. சிந்தாதிரிப்பேட்டை பாலத்திற்கு அருகிலுள்ள கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூல் கட்டிடத்தில் ஜனவரி 21-ந்தேதி சனிக்கிழமை மாலை 6-30-க்குக் கழகம் ஆரம்பமாகி, பிறகு செவ்வாய் சனிக்கிழமைகளில் மாலை 6-30 முதல்7-15 வரையில் நடைபெறும்.

7. மாம்பலம் தியாகராஜ நகரிலுள்ள கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடக் கட்டிடத்தில் 22-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-15-க்கு ஆரம்பமாகி, பிறகு வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7-15 முதல் 8 வரை நடைபெறும்.

அவரவர் வசிக்கும் இடத்தையும் உத்தியோகம் புரியும் இடத்தையும் அனுசரித்து இக்கழகங்களில் எதனில் வேண்டுமானாலும் சேரலாம்.

இக்கழகங்கள் நம் கலாநிலய இலக்கிய வாரப்பத்திரிகையின் ஆதரவில் இலவசமாய் நடைபெறும். எவ்வித நிபந்தனையும் இன்றி யாவரும் சேரலாம்.

***

**பர்னார்ட் ஷா:**—இப்பொழுது பம்பாயில் தங்கியிருக்கும் பர்னார்ட்ஷா ஒரு விருந்தில், ஜனநாயகம் பிரயோஜனமற்றது என்றும்; அம்முறையில் எல்லாம் பொறுப்பற்ற தன்மையில் நடைபெறுகின்றனவென்றும், இத்தாலியில் நடைபெறுகின்ற முசலினி அரசாங்கமோ அல்லது ருஷிய லெனின் அரசாங்கமோ தான் ஒரு நாட்டின் நலத்திற்கு உரியது என்றும் கூறியுள்ளார்.

***

**கரும்புப் பட்டு :**—அமெரிக்காவிலுள்ள ஒரு ரசாயன ஆராய்ச்சிகாரர் கரும்பங்கழியின் சக்கையிலிருந்து குறைந்தசெலவில் சிறந்த பட்டுச் செய்யலாம் என்று கண்டுபிடித்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

***

**பாரிஸ் நாகரிகம்:**—மாதர்கள் முன்னேற்றம் மிக அடைந்துள்ள பாரிஸ்நகரிலுள்ள மாதர்கள் தம் கண் இமைகளுக்கு வெள்ளிமுலாம் பூசிக்கொள்கின்றனர் என்று தெரிகின்றது.

***

**லண்டன் புத்தக சாலை:**—லண்டனிலுள்ள புத்தக சாலையில் 40 லட்சம் புத்தகங்கள் இருக்கின்றன. இப்புத்தகங்கள் வைக்கப் பெற்றிருக்கும் அலமாரிகளின் நீளம் 55 மைல் என்று கணக்கெடுக்கப் பெற்றிருக்கின்றது. 55 வருடங்களுக்கு முன் இப்புத்தகங்களைக் கணக்கிட்டனராம். இப்பொழுது மீண்டுமோர்முறை புத்தகக் கணக்கெடுக்கப் போகின்றனராம். இக்கணக்கெடுக்க 400 பவுன் விலையுள்ள லெட்ஜர்கள் வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றிருக்கின்றது. இக்கணக்கு முடிய 20 வருடம் ஆகும், என்றும் கூறப்படுகின்றது.

***

**உடலமைப்பு:**—டாக்டர் கியோகி என்னும் ஓர் இராசயன ஆராய்ச்சிகாரர் மனித தேகத்தின் அமைப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:—நல்ல வயது வந்தவனுடைய சரீரத்தில் உள்ள கொழுப்பைக் கொண்டு 14 சோப்புக் கட்டிகள் செய்யலாம். தேகத்திலுள்ள இரும்புச் சத்தைக்கொண்டு ஒரு பெரிய ஆணியைச் செய்யலாம். சர்க்கரைச் சத்தைக் கொண்டு ஒரு கரண்டி சர்க்கரை செய்யலாம். சுண்ணும்புச் சத்தைக் கொண்டு ஒரு கோழிக்குஞ்சிற்கு வெள்ளையடித்துவிடலாம். பாஸ்பரஸைக் கொண்டு 55 தீப்பெட்டிகள் செய்யலாம். மாக்னீஷியத்தைக் கொண்டு ஒரு அவுன்ஸ் மாக்னீஷியம் எடுக்கலாம். கந்தகத்தைக் கொண்டு ஒரு நாயின் உண்ணியைப் போக்கலாம். மனித சரீரத்தில் 32 காலன் ஜலம் இருக்கின்றது.

***

**சீன ஜப்பான் யுத்தம்:**—சர்வதேச சங்க முயற்சியால் இன்னும் சீன ஜப்பான் யுத்தம் நிற்கவில்லை. சீனாவோடு போர்செய்வது, ஐரோப்பிய ஆதிக்கம் கீழ்நாடுகளில் பரவாதிருக்கவே என்று ஜப்பானிய ராஜ தந்திரிகள் கூறுகின்றனர். ஷாங்கையிலும் அதைச் சேர்ந்த பிரதேசங்களிலும் இரு நாட்டுப் படையினரும் அடிக்கடி சண்டைகள் செய்கின்றனர் என்று தெரிகின்றது.

***

**சென்னையில் புதிய கட்சி:**—கனம் பிரதம மந்திரி பொப்பிலி ராஜா சென்னையில் ஒரு புதிய கட்சியை ஏற்படுத்த முயன்று வருகின்றனர் என்றும் அக் கட்சிக்காக 'நியூடைம்ஸ்' என்னும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை ஏற்படலாம் என்றும் தெரிகிறது.

***

**கரந்தைத் தமிழ்ச் சங்கம் :**—தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 22-வது ஆண்டு விழா, இம்மாதம் 21, 22 தேதிகளில் ஸ்வாமி விபுலாநந்தர் அவர்களின் தலைமையில் தஞ்சையில், மேற்படி சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். அவ்விழாவில் கம்பரும் சேக்கிழாரும் என்னும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீமான் R. P. அமிர்தலிங்கம்பிள்ளை யவர்களும், மெய்யுணர்வு என்பதுபற்றிப் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களும், தமிழாக்க மரபு என்பது பற்றி பண்டிதர் திரு. தேவநேசப் பாவாணர் அவர்களும், பாரதியார் தமிழ்ப்பற்று என்பதுபற்றி ஸ்ரீமான் R.P. சேதுப்பிள்ளை யவர்களும்முறையே பேசுவார்கள்.

# — கம்ப ராமாயணம் —

## பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

### ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனாம்! ஆரோக்கிய கிரந்தம் இனாம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.
ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதி பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)